# நாடகம் போட்டுப்பார்

மெரீனா



COMICS PDF TIMES
HSC

# நாடகக் குழுவினர்

| | |
|---|---|
| ராம்குமார் | வின்சென்ட் |
| முரளி | சாரதி |
| சப்பாணி | சாமிஜி |
| பாலு | டிங்கு |
| சுகேஷ் | சுபத்ரா |
| சத்தியாதேவி | முத்தம்மா |
| சங்கர் | ரங்கப்பா |
| சிக்கி | அப்பாராவ் |
| நரசிங்கராவ் | வி.கே. |
| ஹரன் | ராமுடு |
| ரத்தினம் | ஹரன் |

NOT FOR SALE
FANMADE ONLY

COMICS PDF TIMES
HSC

# நாடகம் போட்டுப் பார்

## 1

COMICS PDF TIMES

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்த அந்தக் காலத்திலிருந்தே, 'கல்யாணம் பண்ணிப்பார்', 'வீட்டைக் கட்டிப் பார்'! என்ற அனுபவம் மிக்க பொன்னான இரு மொழிகளை நம் முன்னோர் எச்சரிக்கை மொழிகளாக நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்த இரண்டுடன் 'நாடகம் போட்டுப் பார்!' என்ற மூன்றாவதையும் நான் சேர்க்க விரும்புகிறேன்.

இப்படி அவரவர் அனுபவங்களின் அடிப்படையில் 'சினிமா எடுத்துப் பார்', 'டி.வி. சீரியலுக்கு அப்ரூவல் வாங்கிப் பார்', 'தேர்தலில் நின்று பார்', 'குழந்தையைப் பள்ளியில் சேர்த்துப் பார்', 'அபார்ட்மெண்ட்டில் குடியிருந்து பார்' என்ற புதுப்புதுப் பழமொழிகள் தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரங்கில் ஹாயாக உட்கார்ந்து கொண்டு நாடகம் பார்க்கிறவர்களுக்கு, அந்த நாடகம் அரங்கேற்றமாவதற்கு

முன் நாடகக் குழுவினர் காணும் கனவுகளையும், படும் கஷ்டங்களையும், செய்யும் தியாகங்களையும் பற்றித் தெரியவேண்டாமா? ரிகர்சல்களின்போது என்னவெல்லாம் நடக்கிறது என்று அவர்கள் அறிய வேண்டாமா? நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, மேக்கப் அறையிலும் மேடையின் சைடுகளிலும் நடைபெறும் வேறொரு நாடகத்தையும் ரசிகர்கள் ரசிக்க வேண்டாமா?

இதற்காக நான் ஒரு அமெச்சூர் நாடகக் குழுவை உருவாக்கியிருக்கிறேன். அது என் கற்பனை மனைவி பிரசவித்த நிஜத்தின் நிழல், குழுவினர், உண்மையின் பொய் ஜனனங்கள் (மன்னிக்கவும், புதுக்கவிதைச் சூழலின் அரைகுறைப் பாதிப்பு... வேறொன்றும் இல்லை). வழக்கமான வார்த்தைகளில் புரியும்படியாகவே சொல்லிவிடுகிறேன். நாடகக் குழுவினரின் பெயர்கள் அனைத்தும் கற்பனைப் பெயர்களே, யாரையும் குறிப்பிடுவன அல்ல. அவர்கள் மட்டுமல்ல... இந்தக் கட்டுரைத் தொடரில் இடம்பெறும் யாராவது உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்த நபரின் ஜாடையாக இருந்தால், என் கற்பனைத் திறனில் ஏதோ கோளாறு இருப்பதாக நினைத்துக் கொள்ளவும். ('அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற பழமொழியை நினைவுபடுத்தி வீணாகக் குழப்பிக் கொள்ளாதீர்கள்).

**தே**சிய வங்கி ஒன்றின் பரபரப்பான காலை நேரம்... அந்த வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒரே காரணத்துக்காக பலர் கௌண்ட்டருக்கு வெளிப்புறம் கழுதைப் பொறுமை யுடன் காத்திருக்க, உட்புறம் பணியாளர்களில் சிலர், கௌண்ட்டருக்கு கௌண்ட்டர் நடந்து கொண்டிருக்கிறார் கள். வேறு சிலர் மேஜைக்கு மேஜை நகர்ந்து சிரித்தபடி நலம்

விசாரித்துக் கொண்டும், ரகசியமாக காமெண்ட் அடித்துக் கொண்டும் இருக்கிறார்கள். 'கரென்ட்' கல்பனா, 'சேவிங்க்ஸ்' சவிதாவிடம் முன்தினம் பார்த்த டி.வி. சினிமாவைப் பற்றிய சீரியஸ் விமரிசனத்தில் ஈடுபட்டிருக் கிறாள்.

பிரும்மாண்டமான லெட்ஜர் ஒன்றைப் பிரித்து வைத்தபடி, ராம்குமார் பக்கத்து ஸீட்டு முரளியுடன் தாங்கள் தொடங்கப் போகும் நாடகக் குழுவில் யார் யாரைச் சேர்த்துக்கொள்வது என்பதைப் பற்றி விவாதம் நடத்திக் கொண்டிருந்தான். நாடகக் குழுவொன்று தொடங்குவது என்று அவர்களிடையே முன்தினம் தான் முடிவாகியிருந்தது. அதற்குக் காரணமும் இருந்தது.

ராம்குமார் சென்னை வங்கியில் வந்து சேருவதற்கு முன், நான்கைந்து வருடங்கள் கல்கத்தாவில் வேறு ஒரு வேலையில் இருந்தான். அப்போது அவன் நண்பன் சென்குப்தாவுடன் வங்காள நாடகங்கள் சிலவற்றைப் பார்த்திருக்கிறான். அங்கு நடைபெற்ற நாடக விழாவொன்றில் இடம் பெற்ற மராத்தி நாடகத்தையும் பார்த்துப் பிரமித்துப் போயிருக்கிறான். அவர்களுடைய நாடகப் பாணியும் கையாளும் உத்திகளும் அவனுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. அதனால் கல்கத்தாவுக்கு ஆண்டுதோறும் சென்னையிலிருந்து வரும் குழுக்கள் போடும் தமிழ் நாடகங்களைப் பார்த்து வெட்கமும் வேதனையும் படுவான். வங்காள, மராத்திய நாடகங்களைப் போல் தமிழிலும் மேடையேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தைத் தன்னுள் வளர்த்துக் கொண்டவன் ராம்குமார்.

COMICS PDF TIMES

சென்னையிலேயே பிறந்து வளர்ந்த முரளி அமெச்சூர் நடிகன். ஏதாவது ஒரு ட்ரூப்பில், ஏதாவது ஒரு நாடகத்தில், எந்த ரோலிலாவது நடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற தணியாத லட்சியமும் தீராத அரிப்பும் கொண்டவன்.

நாடக ஆர்வம்தான் ராம்குமாரையும் முரளியையும் இணைத்து வைத்தது. இருவரும் தமிழ் நாடகங்கள் பார்க்கச் செல்வார்கள். 'கல்கத்தா குமார்' என்று எல்லோருக்கும் பெருமையுடன் அறிமுகப்படுத்தி வைப்பாள் முரளி. சாதாரணமாக எந்த நாடகத்தையும் 'நன்றாக இருந்தது' என்று ஒப்புக்கொள்ள மாட்டான் ராம்குமார். ''ஸீன் செட், லைட்டிங் எல்லாம் திராபை'' என்பான். ''தீமோ, ப்ளாட்டோ, மெஸேஜோ இல்லை'' என்று 'ஆர்க்யூ' பண்ணுவான். ''சீப் அண்ட் வல்கர் ஜோக்ஸ்'' என்று ஒட்டுமொத்தமாகக் கண்டனம் செய்வான். ''நடிகர்களுக்கு ஸ்டேஜ் சென்ஸோ, மூவ்மெண்ட்ஸைப் பற்றிய பிரக்ஞையோ, வாய்ஸ் மாடுலேஷனோ இல்லை'' என்று விமரிசிப்பான்.

ராம்குமார் பயன்படுத்தும் இங்கிலீஷ் வார்த்தைக ளெல்லாம் முரளிக்குப் புரியவே புரியாது. நடிகர்களும் பார்வையாளர்களும் இரண்டு மணி நேரம் ஜாலியாகப் பொழுதைக் கழிப்பது என்பது தான் அவன் கற்றறிந்த நாடக இலக்கணம். ராம்குமார் அநாவசியத்துக்கு எதையெதையோ சொல்லிக்கொண்டிருக்கிறான் என்று நினைத்துக்கொள்வான். அவன் அடிக்கடி 'பெங்காலி தியேட்டர்', 'மராத்தி தியேட்டர்' என்று கூறுவதைக் கேட்டுக் குழப்பம் அடைந்திருக்கிறான். 'தியேட்டர்' என்றால் நாடகம் நடக்குமிடம் என்ற ஒரே அர்த்தம்தான் அவனுக்குத் தெரியும்.

ஒரு சனிக்கிழமை மியூஸிக் அகாடமியில் இருவரும் நாடகம் பார்த்து விட்டுத் திரும்பும்போது ராம்குமாரிடம் முரளி, "கல்கத்தாவில் மராத்தி தியேட்டர் பார்த்ததாகச் சொன்னியே, கல்கத்தா தமிழர்கள் அங்கே தமிழ் தியேட்டர் கட்டியிருக்கிறார்களா?" என்று கேட்டான்.

ராம்குமாருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. "பெங்காலி தியேட்டர்', 'மராத்தி தியேட்டர்', 'இங்கிலீஷ் தியேட்டர்' என்று நான் குறிப்பிடுவது அவர்களுடைய நாடகப் பணியையும் உத்திகளையும் குறிக்கும். நாடகக் கொட்டகையை அல்ல" என்று ராம்குமார் விளக்கிக் கூறியபோத முரளி அசடு வழிந்தான். பிறகு சமாளித்தான்.

"தெரியும்... சும்மா தமாஷ் செய்தேன். சரி, இத்தனை நாடகங்கள் பார்த்திருக்கியே, தமிழ் தியேட்டரைப் பற்றி என்ன நினைக்கிறே?" என்று அவன் வாயைக் கிண்டினான்.

"எந்தவித இலக்கணத்துக்கும் ஸ்டைலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல் ஒரே கேலிக்கூத்தாக இருக்கிறது. பரிதாபப்படுகிறேன். யாராவது இதை மாற்றித்தான் ஆகணும். பூனை கழுத்திலே யார் மணி கட்டப் போகிறார்களோ?" என்று அலுத்துக்கொண்டான் ராம்குமார்.

"நீதான் கரைகண்டவன் போலப் பேசறியே.... நீயே மணி கட்டேன், பூனையை வேணுமானா நான் பிடிச்சுத் தரேன்" என்றான் முரளி சிரித்துக்கொண்டே.

பேசிப் பேசிக் கடைசியில் இருவரும் 'நாடகம் போட்டுவிடுவது' என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அப்படியொரு முடிவெடுத்த அந்தக் கணத்தில் ராம்குமாரின் ராசி பலன் நிச்சயம் கெட்டதாகத்தான்

COMICSPDFTIMES

இருந்திருக்கவேண்டும். அவன் நிம்மதியைக் குலைக்க நினைத்த வில்லன் விதி, முரளியின் வடிவத்தில் வந்து, 'ஹஹ்ஹ்ஹா' என்று சினிமா பாணியில் சிரித்திருக்க வேண்டும். ஆனால், அது ராம்குமாரின் காதில் விழவில்லை!

ராம்குமாரும், முரளியும் நாடகம் போடுவது என்று முடிவு செய்த பின்னர், தங்கள் குழுவுக்கு 'ராம் முரளி ஸ்டேஜ் ஆர்ட்ஸ்' என்று பெயர் சூட்டினர். முரளியின் வற்புறுத்தலின் பேரில், ராம்குமார் அதன் செயலாளர் – பொருளாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். ராம்குமாரின் யோசனைப்படி பத்திரிகைகளுடனும் சபா காரியதரிசிகளுடனும் தொடர்பு கொள்ளும் முக்கியப்பணியைக் கவனித்துக் கொள்வதாக முரளி உறுதியளித்தான். 'பப்ளிக் ரிலேஷன்ஸ் இன்சார்ஜ்' என்று பெருமையாக எல்லோரிடமும் சொல்லிக் கொண்டான். இதைத் தவிர நடிகர் – நடிகைகள் மேற்பார்வை, சீன், செட், லைட், மைக் ஏற்பாடு, காபி, டிபன், லஞ்ச், 'பர்சேஸ்' எல்லாம் அவனது இலாகாவின் கீழ் வந்தன. ''இதுலேல்லாம் நீ டயத்தை வேஸ்ட் பண்ணாதே... நம்மகிட்டே விட்டுடு... நான் பார்த்துக்கறேன்'' என்று முதலிலேயே சொல்லிவிட்டான் முரளி. ராம்குமாரும் விட்டுட்டான்.

''நாடகம் போட எவ்வளவு பணம் தேவைப்படும்?'' என்று கேட்டான் ராம்குமார். ''இரண்டு வழி இருக்கு. கையிருப்புப் பணத்துக்குத் தகுந்த மாதிரி பட்ஜெட் போட்டுட்டு அதற்குத் தேவையான பணத்தைத் திரட்டலாம்.''

''முதல் வழியிலேயே யோசனை பண்ணுவோம். என் கைலே ரெண்டாயிரம் ரூபாதான் இருக்கு!''

‘‘சரி, சின்ன பட்ஜெட்டாகக் கதையைத் தேட வேண்டும்!’’

‘‘வேண்டாம். கதை என்னிடம் இருக்கிறது. நானே எழுதியது.’’

‘‘என்ன சப்ஜெக்ட்... காமெடியா?’’

‘‘இல்லே. ரெவல்யூஷனரியா இருக்கும்!’’

‘‘நக்ஸலைட் பிரச்னையா, இல்லேன்னா டெரரிஸ்ட் வயலன்ஸா?’’ ஏளமாகக் கேட்டான் முரளி.

‘‘நோ... நோ... அரசியலோ, பொருளாதாரப் பிரச்னையோ இல்லை. சோஷியல் தீம்...’’

‘‘ஓ, சமுதாயப் பிரச்னையா?’’

‘‘ஆமா... ஸ்டோரி அவுட் லைனைச் சொல்றேன், கேக்கறியா?’’

கதாசிரியரிடம் மாட்டிக் கொண்டால் தப்பிக்க முடியாது என்று முரளிக்குத் தெரியும்.

ராம்குமார் கதைச் சுருக்கத்தைத் தொடங்கினான்.

‘‘காதலித்தவனையே கல்யாணம் செய்துகொண்ட பிரமீளா ஒரு வருடத்துக்கெல்லாம் விபத்து ஒன்றில் கணவனைப் பறிகொடுக்கிறாள். ‘கணவனை மறந்துவிட்டு மறுமணம் செய்து கொள்வதில்லை’ என்று உறுதியாக இருக்கிறாள். ஆனால், அலுவலகத்தில் உடன் பணிபுரிந்த கிஷோர்குமார் சோதனையாக அவள் வாழ்க்கையில் குறுக்கிடுகிறான். அவளும் சற்று மனம் தளருகிறாள். அண்ணனும் மறுமணம் செய்து கொள்ளும்படி அவளை

COMICS PDF TIMES

வற்புறுத்துகிறான். ஓர் இரவு பிரமீளாவின் மனத்தில் சூறாவளி வீசுகிறது. கனவில் கணவன் வந்து, 'எனக்குத் துரோகம் செய்யப் போகிறாயா?' என்று கேட்கிறான். (அந்தக் காட்சியை வெறும் லைட் அண்ட் சவுண்ட் எஃபெக்டிலேயே பிரமாதமாகச் செய்து காட்டுவானாம்.) கிஷோரின் காதல் வலையிலிருந்து தப்பிக்க, மறுநாள் வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஊரைவிட்டே போய்விடுகிறாள். பிறகு, சிவப்பு விளக்கு ஏரியா தரகர் கையில் சிக்கிக் கொள்கிறாள் பிரமீளா.

அவளுக்கு அன்று முதலிரவு — அவள் தொழிலுக்கு இறுக்கம் தாங்க முடியாமல் கைப்பையிலிருந்த தூக்க மாத்திரையை விழுங்குகிறாள். கணவன் கனவில் வருகிறான். (இங்கு முரளி லேசாகச் சிரித்துக் கொள்கிறான்.) 'நீ மறுமணம் செய்து கொள். இந்தத் தொழிலைவிட 'அது மேல்' என்கிறான். 'உங்களுக்குத் துரோகம் இழைக்க மாட்டேன்' என்று கதறுகிறாள். 'என் இஷ்டப்படி எது செய்தாலும் அது எனக்கு இழைக்கும் துரோகமாகாது' என்று அவன் சமாதானம் சொல்ல, 'சமுதாயம் என்னைக் காரித் துப்பும்' என்கிறாள். 'என்னைவிட உனக்குச் சமுதாயம் ஒசத்தியா? அதுக்குத்தான் மதிப்புக் குடுப்பியா? இதுதான் பச்சைத் துரோகம்' என்று வாதாடுகிறான் கணவன்.

பிரமீளா மௌனமாகிறாள். 'கிஷோர் உன்னை உண்மையாகவே நேசிக்கிறான். அவன் நல்லவன். அவனைக் கல்யாணம் செய்துகொண்டு சந்தோஷமாக இரு' என்று கூறிவிட்டுக் கனவுக் கணவன் மறைந்து விடுகிறான்.

யாரோ அவளைத் தட்டி எழுப்புவது போல் உணர்ந்த பிரமீளா கண்விழித்துப் பார்க்கிறாள். அங்கே கிஷோர் நின்று

கொண்டிருக்கிறான். அவனுக்கும் அது முதலிரவு – அந்தத் தொழிலைத் தேடி வருவதில்!”

தன் கதையில் தானே ஒன்றிப் போய்விட்ட ராம்குமார் உணர்ச்சி வசப்பட்டு மேலே பேச முடியாமல் நிறுத்தினான்.

“ஏன் நிறுத்திட்டே? அப்புறம் என்ன நடக்கிறது?” என்று கேட்டான் முரளி.

“இவ்வளவுதான் கதை. நாடகத்தை இங்கேயே நிறுத்திடுவேன். மற்றதையெல்லாம் பார்க்கிறவங்க கற்பனைக்கே விட்டுடப் போறேன். இந்த சப்ஜெக்ட் எப்படி?” என்று கேட்டான் ராம்குமார்.

“நல்லாயிருக்கு. ஆனா, ஆடியன்ஸ் கற்பனைக்கு விடற எக்ஸ்பெரிமெண்ட்டல் ப்ளேயெல்லாம் இப்பவேணாம். நம்ம ஆடியன்ஸ் ஏத்துக்க மாட்டாங்க. ட்ரூப் ஆரம்பிச்சுட்டு மொத மொதல்லே விஷப்பரீட்சையெல்லாம் செய்யக் கூடாது... ரெண்டு மூணு காமெடி ப்ளே போட்டு, ஃபீல்டைப் பிடிச்சப்புறம் இதெல்லாம் வெச்சுக்கலாம்...” என்று கூறி ராம்குமாரின் ஆர்வத்தில் மண்ணை வாரி இறைத்தான் முரளி.

ஒரு நாள், ‘மஞ்சள் வானத்தில் நீல சந்திரன்’ என்ற நாடகத்துக்கு ராம்குமாரை அழைத்துச் சென்று ‘சப்பாணி’யை அறிமுகம் செய்துவைத்தான் முரளி. அவன் பெயர் சாரங்கபாணி. அந்த நாடகத்தில் ‘சப்பாணி’ என்ற காமெடி ரோலைச் செய்து ‘அவார்டு’ வாங்கியதால் அவனுக்கு அந்தப் பெயரே நிலைத்துவிட்டது.

“சப்பாணி நம்மகூட இருந்தா, நமக்குப் பெரிய ‘அஸெட்’டாயிருப்பான். எந்த மாதிரியான காமெடி

ரோலையும் டக்கரா செய்வான்'' என்றான் முரளி வீடு திரும்பும் போது.

''சப்பாணி அந்த ட்ரூப்பை விட்டுட்டு வருவானா?''

''கொஞ்ச நாளா இவனுக்கும் ஹீரோவா நடிக்கிறான் பாரு சோனி, அவனுக்கும் சரிப்பட்டு வரலே. அவார்டு வாங்கினதிலேருந்து சப்பாணி கர்வம் பிடிச்சு அலையறான், தன்னை மதிக்கிறதில்லேன்னு சோனிக்கு ஒரு நினைப்பு. அது மட்டுமில்லே... அவன் அடிக்கிற ஜோக்ஸுக்கெல்லாம் அப்ளாஸ் தியேட்டர் கூரையைப் பிய்ச்சுக்கிட்டுப் போவுது. இது வேறே சோனிக்கு ஒரே கடுப்பு. சப்பாணியோட பாதி ஜோக்ஸை சோனி எடுத்துக்கிட்டானாம். சப்பாணி குமுறிக்கிட்டிருக்கான். அதனாலேதான் இந்தச் சமயம் பார்த்து சப்பாணியை இங்கே இழுத்துடலாம்னு ப்ளான் போட்டேன்.''

COMICS PDF TIMES

ராம்குமார் தமிழ் அமெச்சூர் தியேட்டரை நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

''கழுதை இங்கே... குட்டிச்சுவர் எங்கே?'ங்கிற நாடகத்திலே எல்டர் பிரதரா நடிச்ச பாலுவை உனக்கு ஞாபகமிருக்கா? அவன் நல்ல ஆக்டர். 'ரிச் வாய்ஸ்'. அவனையும் சேர்த்துக்கலாம்.'' ''நீ இன்டர்வெல்லின்போது இன்ட்ரட்யூஸ் பண்ணினியே அவன்தானே... அவன் எந்த ட்ரூப்லே இருக்கான்?''

''சுகேஷ் ட்ரூப்லே.''

''கோல்டன் ஸ்டார்ஸ்'லே இருக்கான்னு சொன்னியே!''

''ரெண்டும் ஒண்ணுதான். 'கோல்டன் ஸ்டார்ஸ்'னு ட்ரூப்புக்குப் பேர் இருந்தாலும் எல்லாரும் 'சுகேஷ் ட்ரூப்'னுதான் சொல்வாங்க. இங்கே இப்படித்தான் வழக்கம். யாருக்கும் ஒரிஜினல் பேர் ஞாபகமிருக்காது. ட்ரூப்பை ஆரம்பிச்சு, ஹீரோவா நடிக்கிறவன் பேர்தான் நிலைக்கும். சுகேஷோட சொந்தப் பேர் ஆர். கோவிந்தன். 'சுகேஷ்'னு ஸ்டைலா பேர் வெச்சுக்கிட்டா, சினிமாலே சான்ஸ் கிடைச்சு. ஒரு சின்ன ரோலாவது பண்ணி, அப்புறம் 'சினிமா புகழ் சுகேஷ் நடிக்கும், கழுதை இங்கே... குட்டிச்சுவர் எங்கே?' என்று பெரிசா நாடக போஸ்டர்லே போட்டுக்கணும்னு அவனுக்கு ஒரு ஆசை...''

ராம்குமார் கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

''அன்னிக்கு பாலுவோட பேசிக்கிட்டிருந்தேன்... சுகேஷைப் பத்தி ரொம்ப கோவமா பேசினான். வருஷம் பூரா, ஊர் ஊரா எக்ஸிபிஷன் சான்ஸா வாங்கி இப்ப கைலே நல்ல துட்டுப் புரளுதாம். தன் ட்ரூப்காரங்களைக் கேவலமா நடத்தறானாம். எனக்கு சுகேஷைப் பத்தி தெரியும். லேடி ஆர்ட்டிஸ்டைக் கண்டா பல்லை இளிப்பான். சீ... ரொம்பக் கேவலம். ஒரு சமயம் இவன் ட்ரூப் சேலம் எக்ஸிபிஷனுக்குப் போயிட்டு ஊர் சிரிச்சுப் போச்சு... என்ன நடந்தது தெரியுமா?...''

''முரளி, எனக்கு இதெல்லாம் கேட்க வேண்டாம். நம்ம ட்ரூப்பைப் பத்திப் பேசு'' என்று முரளியை 'கட்' பண்ணினான் ராம்குமார்.

''பாலுவை எதுக்கு இழுக்கறேன் தெரியுமா? ஒரு கல்லிலே ரெண்டு மாங்கா அடிக்கத்தான். சுகேஷ்கிட்டே

ருந்து பாலு நழுவிட்டான்னா, நமக்கு லேடி ஆர்ட்டிஸ்ட் ப்ராப்ளம் சால்வ் ஆயிடும்...''

''அதெப்படி...?''

''அங்கேருந்து சந்தியாதேவியும் வந்துடுவா. அவளை பாலுதான் சுகேஷ்கிட்டே கொண்டு போய்ச் சேர்த்தான். பாலு 'வாம்மா'ன்னா வந்துடுவா. அவன் கண்ட்ரோல்ல தான் இவ இருக்கா!'

''சரி, நாலு பேர் ஆச்சு! மொத்தம் பத்து காரெக்டராவது வேண்டாமா?''

''வேணும்... டெலிபோன்ஸ்லே சங்கர்னு ஒரு நல்ல ஆர்ட்டிஸ்ட் இருக்காரு. மிடில் ஏஜ் காரெக்டர் குடுக்கலாம். அவர் இப்ப எங்கேயும் செய்யறதில்லே... 'நல்ல ட்ரூப்பா இருந்தா சொல்லுப்பா'ன்னு எங்கிட்டே கேட்டுக்கிட்டே இருக்காரு... அப்புறம் எல்.ஐ.சி.யில் 'சக்கி'ன்னு பழைய ஆர்ட்டிஸ்ட் இருக்காரு. டீஸன்ட்மேன். அவராலே ப்ராப்ளம் இருக்காது. ஐ.சி.எஃப் அப்பாராவ்னு ஒருத்தர் இருக்காரு. நிறைய அப்பா ரோல் செஞ்சு அவருக்கு அந்தப் பேர் வந்தது. அவர் பேரு நரசிங்கராவ். அப்புறம், நம்ம பாங்க்லே மைனர் ரோலுக்கு ஒருத்தர் ரெண்டு பேர் கிடைப்பாங்க... நீ வொர்ரி பண்ணிக்காதே'' என்று முரளி அபயம் அளித்தான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை உட்லன்ஸ் டிரைவ்–இன் ஓட்டல் தோட்டத்தில், ஒரு தூங்குமூஞ்சி மரத்துக்கடியில் 'ராம் முரளி ஸ்டேஜ் ஆர்ட்ஸ்' தொடக்க விழாவுக்குப் பூஜை போடப்பட்டது. ராம்குமார், முரளியைத் தவிர சப்பாணி, பாலு, சங்கர், ஹரன், சக்கி, ரத்தினம், வின்சென்ட், சாரதி முதலியவர்கள் ஸ்டேஜின் தூண்களாக ஆஜராகியிருந்தனர்.

ஒரு சிறு பிள்ளையார் படத்துக்குப் பூ வைத்து, கற்பூர ஆரத்தி காட்டினார் முரளி. அப்போது நாலைந்து பேர் பாரதியாரின் 'ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்...' பாடலைப் பாடினார்கள். அந்தப் பாட்டுத் தெரியாததால் ராம்குமார் கைகளைக் கட்டிக் கொண்டு, கண்களை மூடி, தலையைச் சற்றுத் தாழ்த்தியபடி நின்றிருந்தான்.

ராம்குமாரின் நாடக ஆர்வத்தைப் புகழ்ந்து பேசிய முரளி, 'ராம் முரளி ஸ்டேஜ் ஆர்ட்ஸ் தமிழ் நாடக மேடையையும, தமிழகத்தையும் ஏன்... அகில இந்தியாவையே ஒரு கலக்கு கலக்கப் போவது உறுதியென்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினான்.

அத்தனை பேரும் மகிழ்ச்சியில் ஒரு சுற்றுப் பெருத்துப் போயினர். பின்னர் ஸ்வீட், ஐஸ்க்ரீமோடு டிபன் சாப்பிட்டு முடித்தபோது, மற்றொரு சுற்றுப் பெருத்துக் காணப்பட்டனர்!

ஆனால், ராம்குமாரின் மணிபர்ஸ் மட்டும் ரொம்ப இளைத்துப் போயிருந்தது. பாவம்!

தங்கள் குழுவின் கன்னி முயற்சியாக, காமெடி நாடகம் ஒன்றை மேடையேற்ற வேண்டும் என்று முரளி வற்புறுத்திய போது, ''காமெடி நாடகம் என்றால் என்ன?'' என்று ராம்குமார் படுசீரியஸாகக் கேட்டான்.

''நாடகம் முழுவதும் சிரிப்புச் சிரிப்பாக இருக்கவேண்டும்'' என்று ஒரே வரியில் அதன் இலக்கணத்தைப் பிட்டு வைத்தான் முரளி. ராம்குமார் விழித்தான்.

''சபா செக்ரெட்டரிகிட்டே போய் 'நாங்க ஒரு நாடகம் அரங்கேற்றப் போகிறோம், தேதி கொடுங்கள்' என்று

கேட்டவுடனேயே 'கமெடி சப்ஜெக்டா?' என்பதுதான் அவருடைய முதல் கேள்வியாக இருக்கும். மெம்பர்கள் சிரிக்கவில்லையென்றால் அவர் 'டல்'லாகி விடுவார்.

''ஆடியன்ஸ் சிரிக்காவிட்டால்?'' – ராம்குமார் தன் சந்தேகத்தைக் கேட்டான்.

''விடக்கூடாது... அவர்களை எப்படியாவது சிரிக்க வைக்கவேண்டும். சரியான 'டைமிங்' கொடுத்துக் கன்னத்துல அறையற மாதிரி 'பளார்...'னு ஜோக்ஸ் அடிச்சுக்கிட்டே இருக்கணும். கதைக்கோ, காட்சிக்கோ, பாத்திரத்துக்கோ சம்பந்தம் இருக்கான்னு பார்க்கவே கூடாது. சொந்தம், இரவல், பழசு, பத்திரிகையில் வந்தது, ஸில்லி, சீப், வல்கர் ஏதுவாயிருந்தாலும் பரவாயில்லை. ட்ரை பண்ணிக்கிட்டே இருக்கணும்... ஏதாவது ஒரு ஜோக்குக்கு சிரிச்சுட்டாங் கன்னா, அப்புறம் அவங்க நம்ம கையிலேதான்... இது காமெடி நாடகம்னு தெரிஞ்சுக்கிட்டு, எது சொன்னாலும் ஸீனுக்கு ஸீன் சிரிச்சுக்கிட்டே இருப்பாங்க...

இன்னொண்ணு ரொம்ப முக்கியம்... அள்ளிக்கிட்டுப் போற மாதிரி, ஒவ்வொரு ஸீன்லேயும் லைட் ஆஃப் ஜோக் செமத்தையா விழணும்...''

''லைட் ஆஃப் ஜோக்கா...?!''

''ஆமா... ஸீன் முடியறப்ப அடிக்கிறதுக்குன்னே ஒரு டக்கர் ஜோக்கை ரிசர்வ் பண்ணி வெச்சுக்கணும். அதைச் சொன்னதும் விளக்கு அணையணும்... ஆடியன்ஸ் சிரிக்கணும். இப்ப லைட் ஆஃப் ஜோக்ஸ்ல மன்னன் யாரு தெரியுமா சாமிஜி... நீ சரின்னு சொன்னா அவரையே நமக்கு ஒரு காமெடி நாடகம் எழுதித் தரச் சொல்றேன்...''

''நாடகம் எழுதற சுவாமிஜி யாருப்பா?''

''அடேடே... நீ தப்பா புரிஞ்சுக்கிட்டே... அவருடைய சொந்தப் பேர் நாகசாமி... முப்பது வயசுதான் இருக்கும். 'சாமி'ங்கிற பேர்ல ரெண்டு ப்ளே எழுதினார், ரெண்டும் ஊத்திக்கிச்சு... (ராம்குமார் விழிக்கவே, 'ஊத்திக்கிச்சு' என்பதற்குப் பொருள் கூறிப் புரிய வைத்தான் முரளி!) அப்புறம் நியூமராலஜி நிபுணர் மூன்று எழுத்தில் ஒரு பெயர் வைத்துக் கொள்ளச் சொன்னார். சாமியுடன் ஒரு 'ஜி'யைச் சேர்த்துக் கொண்டார்...'' என்று விளக்கினான் முரளி.

இரண்டு நாட்களுக்கெல்லாம் சாமிஜியிடம் ராம்குமாரை அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தான் முரளி. நேரே சப்ஜெக்ட்டுக்கு வந்தான் சாமிஜி.

''எனக்கு நேரமில்லீங்க...'' ராம்குமார், முரளியைப் பார்த்தான் . முரளி, சாமிஜியிடம் ''நேற்றுக் கேட்டப்ப எழுதித் தர்றதா சொன்னீங்களே...'' என்று கேட்டான். சாமிஜி பலமாகச் சிரித்தான். ''நீயும் ஏமாந்துட்டியா? நாடகத்தின் டைட்டிலைச் சொன்னேம்ப்பா... 'எனக்கு நேரமில்லீங்க' எப்படி டைட்டில்?'' என்று பெருமையுடன் முரளியைப் பார்த்துக் கேட்டான்.

''பிரமாதம்'' என்று முரளி பரவசத்துடன் பாராட்டினான். 'இதில் என்ன பிரமாதத்தைக் கண்டுவிட்டான் முரளி' என்று ராம்குமார் ஆச்சரியப்பட்டான்.

''உங்களுக்கு அதிர்ஷ்டம்தான். இந்த ப்ளே நிச்சயம் சக்ஸஸ் ஆகும். திடீர்னு ஒரு டைட்டில் தோணிச்சு, சொன்னேன். எண்ணிப் பார்த்தா பதினோரு எழுத்து, எனக்கு ஒத்தப்படைதான் லக்கி நம்பர்'' என்று டைட்டிலை உறுதிப்படுத்தினான் சாமிஜி.

''எப்போ பூஜை போடலாம்?''என்று முரளி கேட்டான்.

''அது உங்க சௌகரியம். நாளைக்கே கூட வெச்சுக்குங்க... முகூர்த்த நாள் தான்.''

''நாளைக்குள் ஸ்க்ரிப்ட் எப்படி ரெடியாகும்?'' என்ற வியப்புடன் ராம்குமார் முரளியைப் பார்த்தான்.

''சாரோட சந்தேகம் எனக்குப் புரியுது. நாளைக்கு முதல் ஸீன் எழுதிக் குடுத்துடறேன். அதைப் பூஜைலே வெச்சுப் படிச்சுடலாம்... அப்புறம் மூணு நாள்லே இன்டர்வெல் வரைக்கும் எழுதிக் குடுத்துடறேன்... ஓட்டல்லே ரூம் போடுங்க...''

''அதெல்லாம் ராம்குமார் உங்களுக்கு ஒரு குறையும் வைக்கமாட்டார்... நல்ல ப்ளேயா எழுதிக் குடுத்துடுங்க'' என்றான் முரளி.

''ஆமாம் சார். முதல் நாடகம். பிரமாதமா பிரொட்யூஸ் பண்ணப்போறேன். சீக்கிரம் எழுதிக் குடுத்தீங்கன்னா சௌகரியமாயிருக்கும். மனசுல ஏதாவது ஸ்டோரி வெச்சிருக்கீங்களா?'' என்று கேட்டான் ராம்குமார்.

''டைட்டில் வந்துடுச்சுல்லே... ஸ்டோரி தன்னாலே வந்துடும். கவலைப்படாதீங்க... இங்கே கம்ப்யூட்டர் மாதிரி ஸ்டோரீஸ் ஸ்டோர் பண்ணி வெச்சுக்கிட்டேயிருப்பேன். (தலையைத் தட்டிக் காட்டுகிறான்.) பட்டனைத் தட்டி விட்டேன்னா ஐடியாஸ் அருவியா கொட்டும். எனக்கு எழுத ஆரம்பிக்கிறது கஷ்டமில்லே... நிறுத்த முடியாமத்தான் திண்டாடுவேன்... முரளிக்குத் தெரியுமே... 'ஏழரை நாட்டுச்

சனி'யை (இது ஒரு நாடகத்தின் டைட்டில்) ஒரே சனிக்கிழமை ராத்திரி எழுதி முடிச்சேன். ஞாபகமிருக்கா முரளி?' என்று கேட்டு விட்டு, வெற்றிப் புன்னகையுடன் ராம்குமாரைப் பார்த்துக் கொண்டே, பொட்டலத்தைப் பிரித்து சீவலை வாயில் போட்டுக் கொண்டு, வெற்றிலையின் முதுகில் லாகவமாகச் சுண்ணாம்பைத் தடவி, லலிதமாக அதன் காம்பைக் கிள்ளி, வெற்றிலையைக் காயப்படுத்தாமல் நைஸாக நரம்பைக் கிழித்து, இரண்டு பகுதிகளையும் சேர்த்துச் சொகுசாக மடிக்கத் தொடங்கினான் சாமிஜி.

## 2

சாமிஜியைச் சந்தித்துவிட்டு வந்ததிலிருந்து நாடகம் எத்தனை தரம் நடைபெறும் என்பதில் கவனமாக இருந்தான் முரளி. ராம்குமாரோ, நாடகத்தின் தரம் நன்றாக இருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டான்!

என்னதான் 'ஜோக்ஸ் மன்னன்' என்றும் 'காமெடி சக்ரவர்த்தி' என்றும் சாமிஜியை முரளி புகழ்ந்தாலும், அவன் எழுதும் நாடகம் எப்படியிருக்கும் என்று ராம்குமாருக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. 'திடீரென்று தலைப்பைச் சொல்லி, மறுநாள் ஒரு ஸீன் எழுதி, மூன்றே நாளில் இடைவேளை வரை நாடகத்தை எழுதி முடிக்கக் கூடியவர்களை நம்பினால் தமிழ் நாடக மேடையின் கதிதான் என்னாவது?' என்று நினைத்து வேதனைப்பட்டான்.

வெந்த புண்ணில் முரளி வேல் பாய்ச்சினான்:

''இன்னிக்கு சாமிஜியை அடிச்சுக்க ஃபீல்டுலே ஆள் கிடையாது ராம்குமார். அவன் ப்ளேயை செட்டப் பண்றதைப் பார்த்தா பிரமிச்சுப்பூடுவே. இன்டர்வெல் வரைக்கும்தான் ஸ்கிரிப்ட் இருக்கும். அதுக்கப்புறம் ரிகர்சல்லேயே ஸீன் ஸீனா டெவலப் பண்ணிடுவான். அப்பப்ப சிச்சுவேஷனை மாத்திக்கிட்டே போவான்... அங்கங்கே ஜோக்ஸை ஒட்ட வெச்சுக்கிட்டே வருவான்... கடைசிலே க்ளைமாக்ஸ்ல ஒரு அமர்க்கள ட்விஸ்ட் குடுத்து, தியேட்டரை அசர அடிச்சுடுவான்...'' சாமிஜியின் அருமை பெருமைகளை முரளி அடுக்கிக் கொண்டே போனான்.

முழு நாடக ஸ்கிரிப்டையும் பார்த்துவிட்டுத்தான் முடிவு செய்வேன் என்று கூறினால் அதைப் பெரிய அபசாரமாகக் கருதி, முரளி கோபித்துக் கொள்வான் என்பதனால் பூஜை போட நாள் குறிக்கும் பொறுப்பையும் முரளியிடமே விட்டு விட்டான் ராம்குமார்.

நாடகம் போடுவதென்றால், அதற்கு பூஜை போட்டாக வேண்டும். அன்று எல்லோரும் கல்யாண உற்சாகத்திலும் பரபரப்பிலும் காணப்படுவார்கள். முகங்களில் நம்பிக்கை ஒளி வீசும். ஸ்கிரிப்டிலிருந்து சில ஸீன்களை, அந்தந்தப் பாத்திரங்களை ஏற்றுக்கொண்டவர்கள் படிப்பார்கள்.

அதேபோல் மறுநாளும் படிக்கவேண்டும் என்ற நாடக மரபு வழி சென்ட்டிமெண்டும் உண்டு.

பூஜையை நடத்தும் இலாகா சப்பாணியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி, பிள்ளையார் படங்களுக்கு மாலையிட்டு, ஊதுவத்தி ஏற்றி, 'ஸ்கிரிப்ட்'டுக்கு (ஒரே ஸீன்தான் – பெரிய எழுத்தில் ஆறு

பக்கங்கள்) நான்கு மூலைகளிலும் நடுவிலும் குங்குமப் பொட்டு வைத்தான். அங்கிருந்தவர்களில் எல்லோரையும் விட வயதானவர் என்ற ஒரே காரணத்துக்காக அப்பாராவ் தேங்காய் உடைத்து, பழ நைவேத்தியம் செய்து கற்பூர ஆரத்தி காட்டினார். எல்லோரும் பயபக்தியோடு 'ஓம் சக்தி' பாடினார்கள்.

அடுத்தபடி, அனைவரும் ஆவலோட எதிர்பார்த்துக் கொண்டிருந்த அயிட்டம் – டிபன்! கேசரி, வெண்பொங்கல், வடை, காபி.

டிங்குதான் எல்லோருக்கும் கொண்டு வந்து கொடுத்தான். சப்பாணி தான் அவனை அழைத்து வந்து ராம்குமாருக்கும் முரளிக்கும் அறிமுகம் செய்து வைத்தான். அதனால் சப்பாணிக்கு ரகசியமாக இரண்டாவது பிளேட் பொங்கல் -- வடை கொடுத்தான்.

சிற்றுண்டி முடிந்ததும், யாரும் சொல்லாமலே சாமிஜி திடீரென்று எழுந்து நின்று பேசத் தொடங்கினான். புது நாடகக் குழு சென்னைக்கும், தமிழ் நாடகமேடைக்கும் பெருமை சேர்க்கப் போவது நிச்சயம் என்று அடித்துக் கூறினான். 'எனக்கு நேரமில்லீங்க' என்று புது மாதிரியான காமெடியாக இருக்கும் என்றும், அதன் வெற்றிக்கு நாடகாசிரியன் என்ற முறையில் மட்டுமின்றி, அதன் டைரக்டர் என்ற முறையிலும் அனைவரது ஒத்துழைப்பையும் கேட்டுக் கொள்வதாகக் கூறி அமர்ந்தான்.

ராம்குமாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. நாடகத்தை டைரக்ட் செய்யும்படி சாமிஜியிடம் அவன் கூறவேயில்லை. முரளியைப் பார்த்தான். முரளி வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

அடுத்து ஸ்கிரிப்ட் படிக்க வேண்டும். இருப்பது ஒரு காட்சிதான். அதில் மூன்றே பாத்திரங்கள். யாருக்கு எதைக் கொடுப்பது என்று அந்த இடத்தில் முடிவு செய்ய முடியாது. ராம்குமாரும், முரளியும் சாமிஜியுடன் ரகசிய ஆலோசனை நடத்திய பிறகு, தற்போதைக்கு யாராவது மூன்று பேரைப் படிக்கச் சொல்வது என்று முடிவாயிற்று.

அன்று பூஜைக்கு வந்திருந்தவர்கள் மொத்தம் பன்னிரண்டு பேர். அவர்களில் மூன்று பேர் பெண்மணிகள். சந்தியாதேவியும், சுபத்ராவும், லேடி ஆர்ட்டிஸ்ட்ஸ், மூன்றாவது பெண்மணி சந்தியாதேவியின் அம்மா – அதாவது எஸ்கார்ட் – அதாவது பெண்ணுக்குத் துணை.

சப்பாணி, பாலு, சுபத்ரா மூவரையும் அழைத்து, ஒரே ஸ்கிரிப்டை வைத்துக் கொண்டு வசனங்களைப் படிக்கச் சொன்னான் சாமிஜி.

எஸ்கார்ட் அம்மாவின் முகம் கடுகடுத்தது. சடாரென்று எழுந்தாள். தன் பெண்ணைப் பார்த்து ''நமக்கு இங்கே இன்னாடி வேலை! வா போவலாம்'' என்று அழைத்துக் கொண்டு விறுவிறுவென்று நடந்தாள். சமாதானம் செய்யப் பின்னாலே சப்பாணி விரைந்தான்.

அன்றைய பூஜைக்கு சந்தியாதேவியையும் அவள் அம்மாவையும் சப்பாணிதான் அழைத்து வந்திருந்தான். முரளி அவர்களை ராம்குமாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

''தம்பிகிட்டே எல்லாம் சொல்லிட்டீங்களா?'' என்று முத்தம்மா ( எஸ்கார்ட்டின் பெயர்) சப்பாணியைப் பார்த்துக்

கேட்டாள். ''அதை நீங்களே பேசிக்கிடுங்க'' என்றான் சப்பாணி பதிலுக்கு.

விஷயம் தெரியாமல் ''என்ன விஷயம்?'' என்று கேட்டு வகையாக மாட்டிக் கொண்டான் ராம்குமார். ''சம்பள விஷயந்தாங்க. தம்பி சொல்லியிருக்கும்னு நினைச்சேன்'' என்று தன் காவியேறிய பற்களைக் காட்டினாள் முத்தம்மா.

சம்பளம் என்பது நாடகத்தில் நடிப்பதற்கு அளிக்கப்படும் தொகையென்றும் தொழில்முறை மேடையிலிருந்து அமெச்சூர் மேடையில் நுழைந்துவிட்ட சொல் என்றும் விளக்கினான் சப்பாணி.

''என்ன எதிர்பார்க்கறீங்க?'' என்று ராம்குமார் கேட்டதற்கு, ''நீங்க மொதமொதலா நாடகம் போடறீங்க. உங்ககிட்டே ரேட் பேசறது நல்லா இருக்காதுங்க. 120 ரூபா குடுத்துடுங்க. வெளியூருக்கு ரெண்டு சம்பளம். பம்பாய், டெல்லி, கல்கத்தாவா இருந்தா ரெண்டரை சம்பளம்... இதைத் தவிர, ரிகர்சலுக்கு வந்துட்டுப் போறதுக்குத் தனியா 'கன்வீன்ஸ்' குடுத்துடணும்'' என்றார் கறார் குரலில். ராம்குமார் சப்பாணியைப் பார்த்தான். 'கன்வேயன்ஸ்' என்பதைத்தான் அவள் சொந்த இங்கிலீஷில் அப்படிச் சொல்கிறாள் என்று புரியவைத்தான்.

முரளி அப்போது அங்கு வரவே, ''இந்த விஷயத்தைப் பத்தியெல்லாம் இவர்கிட்டே பேசிக்குங்க'' என்று சொல்லிவிட்டு ராம்குமார் அங்கிருந்து நழுவிவிட்டான்.

முத்தம்மா முரளியிடம் பேச்சைத் தொடர்ந்தாள்: ''இதோ பாருங்க தம்பி, பாலு சார் சொன்னாரேன்னுதான்

நாங்க இங்கே வர ஒப்புக்கிட்டோம். அங்கே 150 வாங்கிக்கிட்டிருந்தோம்... இங்கே 120 வாங்கிக்கறேன்... இதுக்குக் குறைச்சுட்டா கட்டுப்படி ஆவாதும்மா. திடீரென்று 'அம்மா' போட்டு நெருங்கிப் பழகத் தொடங்கினாள்.

முரளி பழம் தின்னு கொட்டை போட்டவனாயிற்றே! அந்த ட்ரூப்பில் 100 ரூபாதான் வாங்கிக் கொண்டிருந்தாள் என்று அவன் ஏற்கெனவே விசாரித்து வைத்துக் கொண்டிருந்தான். அதைக் காட்டிக் கொள்ளாமல், 100 ரூபாய்க்கு முத்தம்மாவைச் சம்மதிக்க வைத்தான்.

சந்தியாதேவியும் எஸ்கார்ட் அம்மாவும் வந்து அரை மணி கழித்துத்தான் சுபத்ரா வந்தாள். அவள் சந்தியாவைவிட ஐந்தாறு வயது பெரியவள். சீனியர் ஆர்ட்டிஸ்ட். ஹீரோயின் வேஷம் போட்டுக் கொண்டிருந்தவள், இப்போது அக்கா, அண்ணி, அம்மா வேஷங்களெல்லாம் போடுகிறாள். முதல் நாள் முரளி சுபத்ராவைச் சந்தித்தபோது, அவள் பெரிய பந்தாவுடன் பேசினாள். ''எந்த ரோல் குடுத்தாலும் உயிரை விட்டுச் செஞ்சுக் குடுப்பேன்'' என்றாள். எத்தனை வசனமாயிருந்தாலும் ரெண்டே நாள்லே பாடம் பண்ணிடுவாளாம். அவளுக்கு நிறைய ரிகர்சல்கள் தேவையிருக்காதாம். ஜம்பம் அடித்துக் கொண்டாள். ''ஆனா, எட்டரை மணிக்கெல்லாம் விட்டுடணும்'' என்று கண்டிஷன் பேசினாள். வெளியூர் போனால் ஹஸ்பெண்டோ, தங்கையோ கூட வருவார்களாம்... அவர்களுக்கு 'சபரேட்டா' ரூம் போட்டுக் குடுக்கணுமாம். கடைசியில், ''என் சர்வீஸைப் பார்த்துச் சம்பளம் போட்டுக் குடுங்க'' என்றாள். அவள் சர்வீஸுக்கு 80 ரூபாய் தருவதாக முரளி கூறியதும், அவள் பதில் பேசாமல் ஒப்புக்கொண்டாள்.

சுபத்ரா உள்ளே நுழைந்ததும், சந்தியாதேவியும் முத்தம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ''மேக்கப்பைப் பார்த்தியா பேபி... சின்னப் பொண்ணுன்னு மனசுலே நினைப்பு'' என்று ஏளனமாகச் சிரித்தாள் முத்தம்மா. ''உனக்கேன் இதெல்லாம்.... சொம்மா இரேன்'' என்று அம்மாவை அடக்கினாள் சந்தியாதேவி.

சுபத்ரா அவர்கள் அருகில் போய் அமராமல், பத்துப் பதினைந்து அடி தள்ளியே தனியாக அமர்ந்திருந்தாள். ஒரு முறை சுபத்ராவும் சந்தியாதேவியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள நேர்ந்தபோது, இருவரும் லேசாகச் சிரித்துக் கொண்டனர். அதோடு சரி, ஒரு வார்த்தைகூடப் பேசிக்கொள்ளவில்லை.

ஒரு சமயம் சுபத்ராவும், சந்தியாதேவியும் ஒரே ட்ரூப்பில் நடித்துக் கொண்டிருந்தனர். ஸ்டேஜ் இன்சார்ஜ் ரங்கப்பாதான் தலைக்கு வைத்துக் கொள்ள அவர்களுக்குப் பூவைப் பங்குபோட்டுக் கொடுப்பது வழக்கம். சுபத்ராவுக்கு அரை முழம் அதிகமாகவே பூ கொடுக்கிறான் என்று ஒரு நாள் முத்தம்மா பெரிய ரகளை பண்ணினாள். இதனால் இவர்களிடையே ஒரு பகை வளரத் தொடங்கியது. அது வெளியூர் நாடகத்துக்குப் போகும்போது ரயிலில் அப்பர் பர்த் யாருக்கு, லோயர் பர்த் யாருக்கு என்ற சூடான வாக்குவாதமாக வெடித்து, பெரிய வாய்ச்சண்டையாக முற்றி, ஒருத்தி முடியை இன்னொருத்தி பற்றி இழுத்துக் கொண்டதில் முடிந்தது!

இந்தப் பின்னணியில் பார்த்தால்... தன் மகளை ஒதுக்கிவிட்டு சாமிஜி, சுபத்ராவிடம் ஸ்கிரிப்டைப் படிக்கச் சொன்னபோது, முத்தம்மாவுக்கு ஆத்திரம் பொங்கி, 'இந்த

ட்ரூப்பில் தன் மகள் நிச்சயம் அலட்சியப்படுத்தப்படுவாள்' என்று நினைத்து கோபமாக வெளியேறியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அவர்களைப் பின்தொடர்ந்து சென்ற சப்பாணியால் தாயையும் மகளையும் சமாதானம் செய்ய முடியவில்லை.

''இதோ பாருங்க... இந்த ட்ரூப்லே ஒண்ணு நம்ம பேபி இருக்கணும். இல்லே அந்த கஸ்மாலம் இருக்கணும். அதை மொதல்லே முடிவு பண்ணுங்க'' என்று முகத்தில் அடித்த மாதிரி கூறித் திருப்பியனுப்பிவிட்டாள் எஸ்கார்ட் முத்தம்மா.

# 3

நாடகத்துக்குப் பூஜை போட்ட அன்று சந்தியாதேவியின் எஸ்கார்ட் முத்தம்மா அநாகரிகமாக நடந்து கொண்ட விதம் ராம்குமாருக்கு மிகுந்த வேதனையை அளித்தது. மறுநாள் பாங்க் கான்டீனில் முரளியிடம் மனம் திறந்து பேசினான்.

''முரளி, நான் டீஸண்ட்டா ஒரு ட்ரூப் நடத்தணும்னு நினைக்கிறேன். இந்த மாதிரி லேடீஸுங்களே நம்ம ட்ரூப்புக்கு வேணாம். அந்த அம்மாவோட பேச்சும். முழியும் எனக்குப் பிடிக்கலே...''

''அவங்க எப்படியிருந்தா உனக்கென்ன? சந்தியாதேவி ஃபர்ஸ்ட்கிளாஸ் ஆர்ட்டிஸ்ட்! அவளை நாம் லூஸ் பண்ணக்கூடாது. தயவுசெஞ்சு நீ இதுலே தலையிடாதே. எங்கிட்டேயும் பாலுகிட்டேயும் விட்டுடு'' என்று கட் அண்ட் ரைட்டாகக் கூறிய முரளி பேச்சை மாற்றினான்.

ராம்குமாரைக் குஷிப்படுத்துவதற்காக, சரவணா கல்சுரல் அகாடமி ராஜ ரத்தினத்தைச் சந்தித்ததைப் பற்றி உற்சாகமாகப் பேசினான் முரளி. ஜூன் மாதம் நாடக அரங்கேற்றத்துக்கு அவர் தேதி கொடுத்துவிட்டதைப் பற்றிக் கூறினான். ராம்குமாருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

''என்ன நாடகம் போடப் போறோம்னு நம்பளுக்கே தெரியாது... இன்னும் முதல் ரிகர்சலே நடக்கலே அதுக்குள்ளே அவர் எப்படி 'டேட்' குடுத்தார்?'' என்று கேட்டான் ராம்குமார்.

''நான் என் வழக்கப்படி ஒரே கல்லுல ரெண்டு மாங்கா அடிச்சேன். 'சாமிஜி ஸ்கிரிப்ட் எழுதப்போறார்'னு சொல்லி சாமிகிட்டே பாதி ஸ்கிரிப்டை எழுதி வாங்கிடுவேன்'' என்றான் முரளி. ராம்குமார் வாயடைத்துப் போனான். அடுத்து, ரிகர்சலைப் பற்றிப் பேச்சுத் தொடர்ந்தது. உட்கார்ந்து பாடம் படிக்கும் வரை முரளி வீட்டிலேயே ரிகர்சலை வைத்துக் கொள்வது என்றும். 'ஸ்டாண்டிங்' ரிகர்சலுக்கு வர்டகைக்கு இடம் தேடலாம் என்றும் முடிவாயிற்று.

முரளி வீட்டில் அந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த முதல் ரிகர்சல். ராம்குமாரைப் பொறுத்தவரையில், ரிகர்சல்கள் எப்படி நடைபெறும் என்பதற்கு ஒரு ரிகர்சலாக அமைந்தது. அது அவன் பொறுமையைச் சோதித்தது!

சாமிஜி எழுதிக் கொடுத்திருந்த ஒன்பது காட்சிகளின் ஜெராக்ஸ் காப்பிகளுடன் குறித்த நேரமான நான்கு மணிக்கெல்லாம் ராம்குமார், முரளியின் வீட்டுக்கு வந்துவிட்டான். பத்து பதினைந்து நிமிடம் அவனும் முரளியும் மட்டுமே எதோ பேசிக் கொண்டிருந்தனர். நாலரை மணிக்கு அப்பாராவ். ''பஸ்லே வரவில்லை'' என்று சொல்லிக்

கொண்டே வந்தார். வின்செண்ட்டும் ஹரனும் வரும்போது மணி நாலு ஐம்பது. சப்பாணி வியர்க்க வியர்க்க நுழைந்தபோது மணி ஐந்து அடித்தது. ஐந்தரை மணி வரை வேறு யாருமே வரவில்லை.

பாவம், ராம்குமார்! ராகுகாலத்துக்கு முன் முதல் ரிகர்சலைத் தொடங்க வேண்டும் என்று நினைத்து வந்தவன் வெறுப்படைந்தான். ரிகர்சலின்போது ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்தால்தான் நாடகத்தை நல்ல முறையில் தயாரிக்க முடியும் என்றும்... டிஸிப்ளின் இல்லாத ட்ரூப், சுருதி சேராத சங்கீதம் போன்றது என்றும் பொதுவாக ஒரு லெக்சர் அடித்தான். சப்பாணியும் முரளியும் ஒருவரை ஒருவர் பார்த்து லேசாகச் சிரித்துக் கொண்டனர்.

ஐந்தேமுக்காலுக்கு அசட்டுச் சிரிப்புடன் சுபத்ரா வந்தாள். முதல் நாள் ஈரோடில் 'ப்ளே'யை முடித்துவிட்டு, ரயிலில் சரியாகத் தூங்காமல் வந்ததால், சாப்பிட்டுவிட்டுப் படுத்தவள் அசந்து தூங்கிவிட்டாளாம். ராம்குமார் காதில் விழும்படி சப்பாணியிடம் லேட்டாக வந்ததற்கான காரணத்தைக் கூறிக் கொண்டிருந்தாள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்த ராம்குமார், ''இன்னும் சாமிஜியைக் காணோமே முரளி...'' என்று கவலைப் பட்டான்.

''ராகுகாலம் போகட்டுமேன்னு வீட்லே காத்துக்கிட்டிருக்காரோ என்னவோ...'' என்று முரளி 'ஜோக்' காகச் சொன்னது ராம்குமாருக்கு ரசிக்கவில்லை. கோபத்தால் முகம் சிவந்தது.

ஆறு மணிக்கு... சக்கி சைக்கிளை ஓட்டிவர, காரியரில் டபுள்ஸ் வந்தான் சாரதி. ''வழிலே டயர் பங்க்சர் ஆயிடுச்சு'' என்று சமா தானம் கூறினான்.

''உனக்கு 'டயர்' பங்க்சர் ஆயிடுச்சா? எங்களுக் கெல்லாம் 'டியூப்' தான் பங்க்சர் ஆவும்'' என்று அவன் பொய் சாக்கு சொல்வதை இடித்துக் கூறினான் சப்பாணி. நேரம் வீணாகிறதே என்று கவலைப்படாமல், ஆளுக்கொரு ஜோக் அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு ராம்குமாரின் வயிறு பற்றியெரிந்தது.

அப்போது ஸ்கூட்டர் சத்தம் கேட்டது. சப்பாணியும் முரளியும் வெளியே விரைந்தனர். பாலுவை அங்கேயே மடக்கி, ''ராம்குமார் படா மூடுலே இருக்கான். ஜாக்கிரதையா பேசு...'' என்று எச்சரித்தனர்.

''சந்தியா என்ன சொன்னா.... வரேன்னாளா?'' என்று கேட்டான் சப்பாணி. ''அது போயிட்டா கேஸ் டா. வேற யாரையாவதைத்தான் பார்க்கணும்...'' என்றான்.

''ஏன்?''

''ராமுடுவோட புது 'ப்ளே'லே செய்யப் போறாளாம். நல்ல ரோலாம்... நூத்தம்பது ரூபா தரேன்னானாம்...''

''வுடு களுதையை... அது ஒரு இடத்துலே நிலைச்சு இருக்காதுப்பா. அதான் டேலண்ட்ஸ் இருந்தும் முன்னுக்கு வரமாட்டேங்குது...''

''அதுமேலே தப்பு இல்லேப்பா... அம்மாக்காரி பேச்சைக் கேக்கற வரைக்கும் அது உருப்படாது...''

''அந்தச் சமயம்... சாமிஜி, சந்தியாதேவி, முத்தம்மா மூவரும் ஆட்டோவில் வந்து இறங்கினர்.

சந்தியாதேவியும் முத்தம்மாவும் சாமிஜியுடன் ஆட்டோவில் வந்திறங்கிய காட்சியை பாலுவால் ஜீரணிக்கவே முடியவில்லை.

''சாமிஜியைப் பற்றி முத்தம்மா என்னிடம் எவ்வளவு கேவலமாகப் பேசியிருக்கிறா!''

'அவன் என்னா பெரிய எழுத்தாளனா? காப்பியடிச்சு எழுதறான். மத்தவங்க ஜோக்கைத் திருடிப் போட்டுக்கறான்' என்று முத்தம்மா பேசியபோது, சந்தியா அதை ஆமோதிப்பதுபோல் சிரித்துக் கொண்டிருந்தாளே, இப்போ சிரித்துப் பேசியபடி மூவரும் ஆட்டோவில் ஒண்ணா வந்து இறங்கறாங்களே! சீ! இதுங்கள்லாம் மேடையிலே நடிக்கிறதைவிட அன்றாட வாழ்க்கையிலேதான் ரொம்ப நல்லா நடிக்கிறதுங்க. இதுங்களை நம்பவே கூடாது. கழிசடைகள்' என்று வெறுத்துக் கொண்டான். ஆனால், அவர்கள் அருகில் வந்ததும், ''வாங்கம்மா, வாங்க மேடம்'' என்றான் வளைந்து நெளிந்துகொண்டே.

அவனும் நடித்தான்!

ராம்குமார் அமைதியாக இருந்தான். அது அடிக்கப் போகும் புயலுக்கு அறிகுறியா அல்லது உள்புயல் அடித்து ஓய்ந்துவிட்டதன் அடையாளமா? அறையில் நிலவிய பேரமைதி படுபயங்கரமாயிருந்தது. யாராவது ஏதாவது பேச மாட்டார்களா என்று எல்லோருமே நினைத்தார்கள்.

''எல்லாரும் வந்துட்டாங்க போலிருக்கே, ஆரம்பிக்கலாமே!'' சாமிஜி வெற்றிலைப் பொட்டலத்தைப் பிரித்தபடி கூறினான். அதில் டைரக்டரின் குரல் தொனித்தது.

''ரிகர்சல் நாலு மணிக்குன்னு சொல்லியிருந்தேன். மணி இப்போ ஆறரை'' – தயாரிப்பாளர் ராம்குமார் பதில் சொன்னான்.

''அப்படியா! நான் கடிகாரம் கட்றதில்லே''– தன் ஜோக்குக்குத் தானே சிரித்துக் கொண்டான் சாமிஜி.

''நம்ம கையிலே கடிகாரம் இல்லாட்டியும் டைம் ஓடிக்கிட்டே இருக்கும்'' – சிரிக்காமல் சொன்னான் ராம்குமார்.

''அடேடே, அது எனக்குத் தெரியாதே!'' சொல்லிவிட்டு சந்தியாவைப் பார்த்து விஷமமாகப் புன்னகைத்தான் சாமிஜி. அவளும் சிரித்தாள். அதைப் பார்த்துவிட்ட சுபத்ரா, கீழுதட்டை அஷ்டகோணலாக்கி அழகு காட்டியதை பாலு ஓரக்கண்ணால் பார்த்தான்!

ராம்குமாருக்கும் சாமிஜிக்குமிடையே டயலாக் விபரீதமாக வளர்ந்து கொண்டிருப்பதை உணர்ந்த முரளி, ராம்குமாரின் காதில் ஏதோ முணுமுணுத்தான்.

''மொதல்லே நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிடறேன். அப்புறம்தான் மத்ததெல்லாம்'' என்று சீரியஸானான் ராம்குமார். ''சாருக்கு என்ன சொல்லணும்?'' – வாயில் சீவலைப் போட்டபடி கேட்டான் சாமிஜி.

''ரிகர்சலை எல்லாரும் சீரியஸா எடுத்துக்கணும்னு விரும்பறேன்!''

'எல்லாரும்' என்ற வார்த்தை அண்டர்லைன் பண்ணிய மாதிரி அழுத்தமாக விழுந்தது.

‘‘எல்லாத்தையும் சீரியஸா எடுத்துக்க ஆரம்பிச்சா நாடகம் போட முடியாது. டென்ஷனாலே மூளைக்கொதிப்பு ஏற்பட்டு ஆஸ்பத்திரி அட்மிஷனுக்கு அப்ளிகேஷன்தான் போடமுடியும்.’’ – சாமிஜியின் கூர்மையான பதில் பாய்ந்து வந்தது.

‘‘மன்னிக்கணும், நான் நாடகம் போடறதை ஒரு தமாஷாவோ, பொழுது போக்காகவோ, நினைக்கலே. நாடகம் பார்க்கிற ஆடியன்ஸ் அதைப் பொழுது போக்கா நினைக்கலாம். ஆனா, நாம அதை சீரியஸா எடுத்துக்கணும். நம்ம பொறுப்பை உணரணும்!’’

சாமிஜி எழுந்து வெளியே போனான். ‘ஐயையோ, இன்னொரு வெளிநடப்பா?’ என்று முரளி தலையைப் பிடித்துக்கொண்டான்.

நல்லவேளை, இரண்டு நிமிடங்களில் சாமிஜி திரும்பி வந்தான். வாயிலிருந்த வெற்றிலையைத் துப்புவதற்காகத் தான் வெளியே சென்றான் என்று தெரிந்ததும் முரளியின் படபடப்பு அடங்கியது.

நிதானமாக உட்கார்ந்து முரளியைப் பார்த்துப் பேசினான் சாமிஜி!

‘‘இங்கே எல்லாரும் ரிகர்சலுக்கு வந்திருக்கோமா, இல்லே நம்ம பொறுப்புகளைப் பற்றிப் பாலபாடம் படிக்க வந்திருக்கோமான்னு எனக்குப் புரியலே. ரிகர்சலுக்கு வரக் கொஞ்சம் லேட்டாயிடுச்சுன்னா, அதுக்காகப் பொறுப்பில் லாதவன்னு என்னைச் சொல்ல இங்கே யாருக்கும் அதிகாரம் கிடையாது.

''என்னது, கொஞ்சம் லேட்டாயிடுச்சா? இங்கே நான் நாலு மணியிலேருந்து காத்துக்கிட்டிருக்கேன்.'' – ராம்குமார்.

''வேலை இருக்கிறவங்களுக்கும் வேலை இல்லாதவர்களுக்கும் வித்தியாசம் இல்லையா?''

''நீ வேலையில்லாத சோம்பேறி! நான் ஃபீல்டுலே படு பிஸியா இருக்கறவன்' என்று சொல்லாமல் சொன்னான் சாமிஜி. இது புத்திசாலி ராம்குமாருக்குப் புரிந்தது. கோபத்தில் முகம் சிவந்தது.

திடீரென்று ரிகர்சல் ஹால் தியான மண்டபமாக மாறியது. ஒரே நிசப்தம். சகிக்க முடியாத அமைதி!

உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து கொண்டிருந்த சாமிஜி தொடர்ந்தான்: ''மிஸ்டர் ராம்குமார்.. ஆர்வத்தோட புதுசா ட்ரூப் ஆரம்பிச்சிருக்கீங்களேன்னு, அதுவும் முரளி சொன்னானேன்னு நிறைய தியாகம் பண்ணி உங்களுக்கு ஹெல்ப் பண்றேன். எத்தனையோ பேர் என் சப்ஜெக்டுக்காக அலைஞ்சுக்கிட்டிருக்கும்போது, உங்களுக்கு எழுதித் தர ஒப்புக்கிட்டேன். நாடகத்தையும் அரங்கேற்றித் தரேன். அதுவரை நீங்க புரொட்யூஸரா மட்டும் இருங்க. அதாவது செலவை மட்டும் கவனிச்சுக்குங்க. வேறே எதுலயும் தலையிடாதீங்க. இஷ்டம் இருந்தா சொல்லுங்க... இல்லேன்னா எழுதினவரைக்கும் என் ஸ்கிரிப்டை எடுத்துக்கிட்டுப் போயிடறேன். அஞ்சு நிமிஷம் டைம் தரேன்... யோசனை பண்ணிச் சொல்லுங்க!''

# 4

முதல் ரிகர்சலிலேயே சாமிஜி ஒரு சர்வாதிகாரியைப் போல், 'அத்தனை அதிகாரங்களும் என் கைக்குள் அடக்கம்... நான் வைத்ததுதான் சட்டம்' என்று சவால்விட்டது ராம்குமாரின் சுயமரியாதையையும், சுய கௌரவத்தையும் புண்படுத்தியது. மறு சிந்தனையின்றி அக்கணமே ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

'இந்த ரிகர்சல் இதோடு முடிகிறது. ஏதாவது சேதி இருந்தால் சொல்லி அனுப்புகிறேன்' என்று சுருக்கமாகப் பிரகடனம் செய்துவிட்டு, சட்டென்று எழுந்து விர்ரென்று வெளியேறிவிட்டான். சாமிஜி அருகிலிருந்த ஒன்பது ஸீன் ஸ்கிரிப்டைக் கையிலெடுத்துக் கொண்டு, யாரிடமும் எதுவும் பேசாமல் ''வர்றியா பேபி?'' என்று சந்தியாதேவியைச் செல்லப் பெயரிட்டு அழைத்தான். ''கன்வீன்ஸ் யார் குடுப்பாங்க?'' என்று முத்தம்மா கேட்க. ''நான் தரேன்...வாங்கம்மா'' என்று கூறி தாய், மகள் இருவரையும் அழைத்துச் சென்றான்.

பின்னர், ஆளுக்கொரு 'காமெண்ட்' அடித்துக் கொண்டு ஒவ்வொருவராகக் கலைந்து சென்றனர்.

முதல் காமெடி நாடகத்தின் தொடக்கமே டிராஜிடியாக முடிந்தாலும், ராம்குமார் மனம் தளர்ந்து விடவில்லை. வீடு கட்டுவதில் எத்தனை இடையூறுகள் ஏற்பட்டாலும் வீடு கட்டாமலா இருக்கிறார்கள்? கல்யாணம் நடத்துவதில் எத்தனை தடங்கல்கள் வந்தாலும் கல்யாணம் பண்ணாமலா இருக்கிறார்கள்? நாடகமும் அப்படித்தான்!

ஒரு வாரத்துக்குள், வி.கே.—யின் 'நான் ஒரு முட்டாளுங்க' நாடகத்தின் ஸ்கிரிப்டை வாங்கிப் போடுவது என்று ராம்குமாரும் முரளியும் முடிவு செய்து, அதற்குப் பூஜை போடுவதில் பரபரப்பானார்கள். இதில் காமெடியுடன் கொஞ்சம் கதையும், ஓரளவு கருத்தும் இருந்தது ராம்குமாருக்குப் பிடித்திருந்தது. கன்னடப் படவுலகில் 'பிஸி'யாக இருந்த வி.கே., யாருக்காகவோ – எப்பவோ எழுதி வைத்திருந்த ஸ்கிரிப்டை ராம்குமாரிடம் கொடுத்து, அட்வான்ஸைப் பெற்றுக் கொண்டு, ''என்ன வேணுமானாலும், செஞ்சுக்குங்க'' என்று கூறிவிட்டு, 'ஹம்பி அவுட்டோர் ஷூட்டிங்குக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

இந்த நாடகத்தில் ஒரே ஒரு லேடி காரெக்டர் இருந்தது முரளிக்கு மகிழ்ச்சி அளித்தது. அதற்கு ராம்குமாரிடம் மூன்று காரணங்களைக் கூறினான்: ''இப்பல்லாம் லேடி ஆர்ட்டிஸ்டுங்க கிடைக்கிறது கஷ்டமாயிருக்கு. ரெண்டு, மூணு லேடீஸ் இருந்தா செலவு அதிகம். ஒரு லேடியா இருந்தா செலவு குறைச்சல். அதனாலே ரெம்யூனரேஷனைக் குறைச்சுச் சொன்னா, சபா செக்ரெட்டரி சந்தோஷப் படுவார். ப்ளே அப்படி இப்படி இருந்தாலும் பரவாயில்லை. லேடி ஆர்ட்டிஸ்ட்ஸ் குறைஞ்சா நமக்கும் ப்ராப்ளம் குறைச்சல் – எத்தனையோ விதத்திலே...''

''நல்ல வேளை, சந்தியாதேவி – முத்தம்மாகிட்டே நாம் மாட்டிக்காம தப்பிச்சுக்கிட்டோம்...'' என்றான் ராம்குமார்.

''பாவம், இப்ப ராமுடு மாட்டிக்கிட்டான். சாமிஜி நமக்கு எழுதின ஸ்கிரிப்டை அவன் தலையிலே கட்டிட்டானாம். சந்தியாதேவியையும் அங்கே சேர்த்து விட்டுட்டானாம்...''

''அவங்க எக்கேடு கெட்டுப் போகட்டும். நமக்கு இப்ப ஒரு லேடி ஆர்ட்டிஸ்ட்டைத் தேடிப் பிடிச்சுக் கொண்டு வா...''

''ஏன்... சுபத்ரா இருக்காங்களே?''

''ரஞ்சிதா ரோலுக்கு அவங்க ரொம்ப ஓல்ட். இங்கிலீஷ். உச்சரிப்பும் ரொம்ப மோசமா இருக்கு... மாடர்ன் கேர்ள் ரோலுக்கு லாயக்கில்லை...''

''அப்படின்னா, நம்ம பாங்க் சேவிங்ஸ் சவிதாவைக் கேட்டுப் பார்க்கட்டுமா? ஆக்ட் பண்ணணும்னு ஆசையா இருக்குதுன்னு ரெண்டு மூணு தரம் என்கிட்டே சொல்லிட்டா...''

''வெரிகுட்! நல்ல சாய்ஸ். ட்ரை பண்ணிப் பாரு...''

அப்போது அப்பாராவ் அங்கே வந்தார். டிஸ்கஷனில் அவரும் கலந்து கொண்டார். ''ஸீன் செட், லைட்டிங் எல்லாம் இப்பவே அரேஞ்ச் பண்ணிட்டா நல்லது ராம்குமார்.''

''சூளைமேடு பாபுவைக் கேட்டுப் பார்க்கலாம். நல்ல ஆளு... மூஞ்சியைச் சுளிக்காம, நமக்கு வேண்டிய மாதிரி செஞ்சுக் குடுப்பார்...''

''சோனிக்கு செட் போடறாரே, அவர்தானே... கேட்டுட்டேன். மொத்தம் ஐந்நூறு ரூபா கேக்கறார்...''

''ரொம்ப அதிகமாயிருக்கே...''

''நீ ஏகப்பட்ட ஸ்பாட் லைட்ஸ் கேக்கறியே... மூணுதான் கொடுப்பாராம். எக்ஸ்ட்ரா ஒவ்வொண்ணுக்கும் இருபது ரூபா வேணுமாம்... வாடகைக்கு வாங்கிக்கிட்டு வரணுமாம்...''

''நான்தான் வழக்கமான டாப் லைட்ஸ், ஆலிஜன் ஒண்ணும் வேணாங்கறேனே...''

''அதையும் சொன்னேன். ஸ்டேஜ் பூரா ஸ்பாட்ஸ் ஃபிக்ஸ் பண்றது பேஜார் வேலையாம்... ரெண்டு ஆளுங்க எக்ஸ்ட்ராவா எம்ப்ளாய் பண்ணணுமாம். கூலி, பேட்டா எல்லாம் எகிறிடுமாம்...''

''என்னப்பா, மெட்ராஸ்ல டெக்கினீஷியன்ஸ் இப்படியிருக்காங்க! நான் புது மாதிரி தியேட்டர் பண்ணணும்னு பார்க்கறேன். முடியாது போலிருக்கே...நாம டெக்னிகலா ரொம்ப மாறணும். மாடிப்படி செட்டும், கிழிஞ்ச சோபாவும், ஒடிஞ்ச நாற்காலியும், புராணகாலப் படுதாவும் மொதல்லே ஒழியணும். மைக் இருக்கிற இடம் தெரியாம செய்யணும்... ஸாஃப்ட் லைட்டிங் குடுக்கணும்...''

''எக்ஸ்கியூஸ்மி ராம்குமார்... இதையெல்லாம் மாத்திட்டா போதும்னு நினைக்கிறீங்களா? சப்ஜெக்ட் நல்லா இருக்க வேணாமா? நடிப்பு வேணாமா? ஸ்பாட்டைப் போட்டு, பாதி ஸ்டேஜை இருட்டாக்கிட்டா போதுமா? ஃபர்னீச்சருக்குப் பதிலா பிளாட்பாரத்தைப் போட்டு நீலத் துணியாலே போர்த்திட்டா ஆயிடுச்சா? எல்லாருமே இப்படிச் செய்ய ஆரம்பிச்சுட்டா, அது மட்டும் ஆடியன்ஸுக்கு போர் அடிக்காதா?'' என்று குறுக்கிட்டார் அப்பாராவ்.

''எல்லாத்துக்கும் அடிப்படை, நல்ல ஸ்கிரிப்டும் நடிப்பும் தாங்கறதை நான் ஒப்புக்கறேன். சப்ஜெக்ட்டுக்குத் தகுந்த மாதிரி ஸ்டேஜை மாத்தணும்.எல்லாரும் ஒரே மாதிரி செய்யணும்னு நான் சொல்லலே... புதுசு புதுசா திங்க் பண்ணணும். கிரியேட்டிவ் தியேட்டரா இருக்கணும்.'' சீரியஸ்

டிஸ்கஷனை முரளி மாற்றினான். பூஜைக்கு நாள் குறிக்கப்பட்டது.

பூஜைக்கு எல்லோரும் குறித்த நேரத்தில் வந்துவிட்டார்கள். சவிதா தன் அண்ணன் துணையுடன் வந்திருந்தாள். டிபன், காபி முடிந்த பிறகு அனைவரும் சுற்றி அமர்ந்து, முதல் காட்சியிலிருந்து தொடங்கித் தங்கள் தங்கள் வசனங்களைப் படித்து முடித்தனர். அந்த இரண்டு மணி நேரமும் ராம்குமார் கண்களை மூடியபடி கேட்டுக் கொண்டிருந்தான். கடைசியில் சிலருடைய தவறுகளைச் சுட்டிக்காட்டினான். சவிதா 'வேளை' என்பதை 'வேலை' என்றும் 'வந்தார்கள்' என்பதை 'வந்தார்கல்' என்றும் உச்சரித்ததைத் திருத்தினான். வின்செண்ட் 'தண்ணி'யை 'தன்னி' என்றும், 'வீணை'யை 'வீனை' என்றும் உச்சரித் ததைக் குறிப்பிட்டு 'ண'வுக்கும் 'ன'வுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒரு முறைக்கு இருமுறையாக நாக்கை மடித்து, டி.வி. டீச்சர் நன்னன் பாணியில் டெமான்ஸ்ட்ரேட் செய்து காட்டினான்.

தொடர்ந்து பத்து நாட்கள் ரிகர்சல் நடந்தது. பதினோராவது நாள்— இன்டர்வெல் வரைக்கும் எல்லோரும் ஸ்கிரிப்டைப் பார்க்காமல் வசனம் பேசவேண்டும் என்று ராம்குமார் கூறியிருந்தான். வசனங்களை ஒழுங்காகப் பாடம் பண்ணாமல், ஐடியாவை மட்டும் வைத்துக் கொண்டு இஷ்டத்துக்கு டயலாக் பேசிப் பழக்கப்பட்ட எல்.ஐ.சி. சிக்கி "சார்... இதுவரைக்கும் நான் ஸ்டேஜ்ல ஒருமாதிரி பழகிட்டேன். என்னாலே ரொம்ப ஞாபகமெல்லாம் வெச்சுக்க முடியாது. வேற யாரையாவது பார்த்துக்குங்க..." என்று கூறி, நாகரிகமாக விலகிக் கொண்டான்.

# 5

நாடக ரிகர்சல்கள் எப்போதுமே ஆமை வேகத்தில் தொடங்கி, அரங்கேற்ற நாள் நெருங்க நெருங்க 'பிக்கப்' ஆகி, சூடு பிடித்துவிடும். டென்ஷனில் அநேகமாக எல்லோருக்கும் பய ஜுரமே கண்டுவிடும். பரீட்சைக்கு முதல் நாள் புத்தகமும் கையுமாகத் தவிக்கும் மாணவன் போல், நடிகர்கள் ஸ்கிரிப்டும் கையுமாகத் தவமிருப்பார்கள். டைரக்டர் இவர்களை வேலை வாங்கியது போக, இவர்கள் டைரக்டரை வேலை வாங்குவார்கள்! 'சார்,' மாடி ஸீனை இன்னொரு தரம் பார்த்துடலாமா?', 'க்ளைமாக்ஸ் ஸீனை இன்னும் நல்லா செட்டப் பண்ணலாம் வாங்க', 'பதினாறாவது ஸீன் ரொம்பவும் தொய்யுது. 'டைட்' பண்ண முடியுா பாருங்க...' என்று ஆளுக்கு ஆள் விரட்டுவார்கள். டைரக்டருக்கு எரிச்சலே வராது. 'ஆர்ட்டிஸ்ட்ஸ் இவ்வளவு கோவாப்ரேட் பண்றாங்களே' என்று பூரித்துப் போய் விடுவார்.

டைரக்டர் கல்கத்தா குமாரும் (ராம்குமார்தான்) இப்படித்தான் சந்தோஷத்தில் பூரித்துப் போனான்.

''பார்த்தீங்களா, எல்லாரும் நேரத்துக்கு வந்ததாலே ரெண்டு நாளா நிறைய ஸீன்ஸ் பார்க்க முடிஞ்சுது. ஒருத்தர் வரலேன்னாகூட 'டம்மி' ஆளைப் போட்டு ரிகர்சல் நடத்தினா, எனக்கு ஒரு 'டோட்டல் இம்ப்ரஷன்' கிடைக்க மாட்டேங்குது. நாளைக்கு இன்டர்வெல் வரைக்கும் ஒரு 'ரன் த்ரூ' பார்த்துடலாம்னு இருக்கேன் (காட்சிகளைத் தொடர்ச்சியாகப் பார்ப்பது.) எல்லாரும் டயத்துக்கு வந்துடுங்க'' என்று சொல்லியனுப்பினான்.

மறுநாள்... யார் கண் பட்டதோ, நினைத்தபடி ராம்குமாரால் 'ரன் த்ரூ' பார்க்க முடியவில்லை. சாரதியின் சைக்கிளை ஆட்டோ ஒன்று இடிக்க அவன் காலில், கட்டுப் போட்டுக் கொண்டு வீட்டில் படுத்துக்கொண்டு விட்டான். சப்பாணிக்கு ஆபீஸில் ஓவர் டைம்!

''இனாகுரேஷனுக்கு இன்னும் ஒரு வாரம்கூட இல்லே. இப்படிப் பண்ணித் தொலைக்கறாங்களே... சே! ஒத்துழைப்பே இல்லை... இவங்களை நம்பி 'டேட்' குடுத்தேன் பார், என்னைச் செருப்பாலே அடிச்சுக்கணும்'' என்று டென்ஷனாகிச் சத்தம் போட்டான் ராம்குமார். நேற்று ஒரு மூடு, இன்று வேறொரு மூடு. உண்மையிலேயே அவன் ஒரு டைரக்டர் ஆகிவிட்டான்!

மறுநாள் முரளி தன் காதில் விழுந்த செய்தியை ராம்குமாரின் காதில் போட்டான். ''சப்பாணி, ராமுடுவின் புது நாடகத்திலே ஒரு ரோல் செய்யறானாம். நேத்து அவன் அந்த ரிகர்சலுக்குப் போயிருந்ததா கேள்விப்பட்டேன். ஆபீஸ் ஓவர் டைம் பொய்!''

ராம்குமார் 'அப்செட்' ஆனான். ''நீதானே அவனை இங்கே இழுத்து விட்டே. உன்னை நம்பிப் பெரிய ரோலைக் குடுத்தேன். இப்படிக் காலை வார்றானே'' என்று தலையில் கையை வைத்துக் கொண்டான்.

சாயந்திரம் ரிகர்சலில் சப்பாணியை ராம்குமார் நேராகவே கேட்டபோது, ''அதைப் பத்தி நீங்க ஏன் கவலைப்படறீங்க? அந்த ப்ளே ஜூலைலதான் இனாகுரேஷன். உங்க ப்ளேயைச் சொன்னபடி நான் செஞ்சு குடுத்துடுவேன். கவலைப்படாதீங்க'' என்றான் கூலாக.

''அப்புறம் ரெண்டு பேர் டேட்ஸ¬ம் கிளாஷ் ஆச்சுன்னா?'' ஆப்செட் ஆனான் ராம்குமார்.

''அப்போ அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம், கவலைப்படாதீங்க!''

'கவலைப்படாதீங்க, கவலைப்படாதீங்க'ன்னு சப்பாணி சொல்லச் சொல்ல ராம்குமார் அதிகமாகக் கவலைப்பட்டான்!

கடைசி வாரத்தில், ரிகர்சல் நடந்து முடிந்ததும் தினமும் 'போஸ்ட்மார்ட்டம்' நடைபெறும். முக்கியமாக மூன்று நான்கு நபர்கள் தெருமுனையிலோ, பஸ் ஸ்டாண்டிலோ நின்றுகொண்டு ஓயாமல் பேசிக்கொண்டிருப்பார்கள். அபிப்பிராயங்கள், ஆலோசனைகள், புகார்கள், எச்சரிக்கை – பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

''நாடகம் நல்லா 'ஷேப்' ஆயிருக்கு. அங்கங்கே கொஞ்சம் 'டச்சுப்' பண்ணி, நாலஞ்சு டக்கர் ஜோக்ஸா ஒட்டினா, அள்ளிக்கிட்டுப் போகும்'' என்று சப்பாணி கூறினான். இன்னும் இரண்டு, மூன்று காட்சிகளில் தான் வரவேண்டும் என்று உள்ளூர அவனுக்கு ஓர் ஆசை!

''சவிதா மேடம் வாய்ஸ் போறாது. இன்னும் போஸ்டர் பேசணும்... கையைக் கட்டிக்கிட்டே பேசறாங்க... அதை கரெக்ட் பண்ணுங்க... இல்லேன்னா ஸ்டேஜ்லேயும் அந்தப் பழக்கம் வந்துடும்'' என்று கூறிய பாலு தன் ஆப்சர்வேஷனை தானே மெச்சிக் கொண்டான்.

''டிராமாவுக்குப் புதுசு பாவம்... கொஞ்சம் நெர்வஸா இருக்காங்க... பாங்க்ல வந்து பாரு, அவங்க வாய்ஸை..'' என்று கூறிய முரளி, ''குமார், இந்த மூர்த்தி எல்லார்

உசிரையும் வாங்கறார்... 'காட்ச் வேர்டே' சரியா குடுக்க மாட்டேங்கிறார்..." என்று புகார் கூறினான்.

தன் வசனத்திலுள்ள கடைசி வார்த்தையைச் சரியாகச் சொன்னால்தான் அடுத்தவர் தன் வசனத்தைத் தொடர முடியும். அதிலும் 'காட்ச் வேர்டு' சரியாகக் கொடுக்கா விட்டால், மேடைக்குப் புதியவர்கள் திண்டாடிப் போவார்கள்.

"அந்த ஆளு கடைசி வார்த்தையை மட்டுமா மாத்தறார்... வசனத்தையே முன்னே பின்னே புரட்டிப் போட்டு, எதிராளியைக் குழப்பிடறார். இஷ்டத்துக்குப் பேசறார்" – புகாரில் பாலுவும் சேர்ந்து கொண்டான்.

"நான் மூர்த்திகிட்டே அஞ்சாறு தரம் சொல்லிட்டேன். அவர் இப்படியே அழும்பு பண்ணிக்கிட்டிருந்தார்னா, அவரை ஒதுங்கச் சொல்லிட்டு பேசாம நான் மேடை ஏறிடலாம்னு நினைச்சுக்கிட்டிருக்கேன்" என்று கூறினான் ராம்குமார். பிறகு திடீரென்று ஞாபகம் வந்தவனாக, "இன்னிக்கு வெளி ஆசாமி ஒருத்தர் ரிகர்சல்ல உட்கார்ந்திக்கிட்டிருந்தாரே, அவர் யாரு?" என்று கேட்டான்.

"உங்களுக்குத் தெரியாதா, அவன் தான் சோனி..."

"இன்னொரு ட்ரூப் நடத்தறவன். நாம கூப்பிடாம எதுக்கு நம்ம ரிகர்சலுக்கு வரான்?"

"இங்கே கிடைக்கிற நல்ல ஜோக்ஸை அமுக்கிக்கிட்டுப் போய், அவன் ப்ளேல நுழைச்சுக்கத்தான்... இனிமே அவன் இங்கே வரக்கூடாதுன்னு சொல்லிடுங்க" என்றான் சப்பாணி.

''அன்னிக்குக்கூட ஒரு நாள் வந்திருந்தான். நீங்கதான் வரச் சொல்லியிருக்கீங்கன்னு நினைச்சேன்... ரெண்டு, மூன்று சபா செகரட்டரிங்ககிட்டே போய் 'காமெடியே இல்லை... ரொம்ப சீரியஸ் சப்ஜெக்ட்... இந்த ப்ளே போணி ஆவாவது'ன்னு சொன்னானாம்...''

''போணி ஆவாதுன்னா என்ன அர்த்தம்?'' – ராம்குமார் கேட்டான்.

''ஊத்திக்குமாம்!''

ராம்குமாருக்கு அதுவும் புரியாமல் போகவே, பாலு விளக்கினான்.

''ஒரு நாடகம் நல்லா வந்திருச்சுன்னா, சோனி வயிறு எரிஞ்சு சாவான். நாளைக்கு ரிகர்சலுக்கு வரட்டும், சொல்றேன்...'' என்று முரளி கூற, அன்றைய போஸ்ட்மார்ட்டம் ஒரு வழியாக முடிந்தது.

# 6

'நான் ஒரு முட்டாளுங்க' நாடகம் அரங்கேறுவதற்கு இன்னும் நான்கு நாட்கள்தான் இருந்தன. ராம்குமாருக்கு இது ஒரு புது அனுபவம். இருபத்துமூன்று மணி நேரமும் இதைப் பற்றிய சிந்தனைதான் – பாங்க் வேலையின்போது கூட. இரவு எப்போதாவது அவனையும் மீறி ஒரு மணி நேரம் தூங்குவதோடு சரி.

அரங்கேற்றத்துக்கு முதல் நாள் 'கிராண்ட் ரிகர்சல்.' அதைச் சுருக்கமாகவும் செல்லமாகவும் 'கிராண்ட்' என்று அழைப்பார்கள்.

இந்தக் காலகட்டத்தில் இசை, ஒளியமைப்பு, காட்சியமைப்பு பிரச்னைகள் முக்கியமாகிவிடும். கர்னாடிக், லைட், சினிமா, ஐரோப்பிய, அரேபிய சங்கீத 'பிட்'டுகளுக்காகக் காஸெட்டுகளை தேடி தேடி அலைந்து, காட்சிகளுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் ஏற்ப செலக்ட் பண்ணி, ஓரிரு காஸெட்டுகளில் ரிக்கார்டு செய்து கொண்டு, மியூஸிக் ரிகர்சல் செய்வார்கள். 'கிராண்ட்' அன்று காலை செட் போட்டதும், விளக்குகளைப் பொருத்தி 'லைட் எஃபெக்ட்ஸ்' என்று ஒரு ரிகர்சல் நடைபெறும். மாலையில் அரங்கேற்றத்துக்கு ஒரு அரங்கேற்றம் நடைபெறும். சாதாரணமாக இடையில் நிறுத்தாமல், நாடக ஷோ மாதிரியே நடைபெறும். குழுவினரின் உறவினர்களும், நண்பர்களும் சில சபா காரியதரிசிகளுமாகச் சுமார் நூறு பேர் அழைக்கப்படுவார்கள். அவர்கள் ரசிப்பதை அல்லது ரசிக்காததைப் பார்த்து, சேர்த்தும் குறைத்தும் மாற்றங்கள் செய்து மறுநாள் அரங்கேற்றம் செய்வார்கள்.

ராம்குமார் கல்கத்தாவிலிருந்து சென்னை வந்தபோது தமிழ் நாடக மேடையைப் பற்றி எதுவுமே அறியாமல் இருந்தான். ஐந்தாறு மாதங்களில் அமெச்சூர் குழுவினருடன் நெருங்கிப் பழகத் தொடங்கியதிலிருந்து பல விஷயங்கள் அவனைக் குழப்பின. வெற்றி நாடகத்தின் அளவுகோல் என்ன? ஆடியன்ஸின் ஓயாத சிரிப்பா? கேட் வசூலா? குழுவின் செல்வ நிலையா?

நாடக நடிகர், நடிகைகளின் புகழுக்கு அவர்கள் நடிப்புத் திறமை காரணமாக அல்லது அவர்களது சினிமா, டி.வி. பப்ளிசிடி காரணமா? நாடகக் கலை தாய் என்றால், மகன்கள் தாய்க்குப் பெருமை சேர்க்கிறார்களா? பெருமை சேர்க்க வேண்டும் என்று நினைப்பவர்களாக இருந்தால், நாடக

விளம்பரங்களில் 'சினிமா புகழ்' என்று போட்டுக் கொள்கிறார்களே... சினிமா விளம்பரங்களில் ஏன் 'நாடகப் புகழ்' என்று பெருமையாகப் போட்டுக் கொள்வதில்லை?

'நம்மகிட்டே மட்டும் ஒரு சினிமா நடிகரோ, நடிகையோ இருந்தா கவலையே படவேண்டாம். வெளியூர்ல ஈஸியா 'புக்'காயிடும். முக்கியமா எக்ஸிபிஷன் நடத்தவறவங்க தேடிக்கிட்டு வந்து சான்ஸ் குடுக்கிறதோட, கேட்ட பணத்தையும் குடுப்பாங்க.

'மார்க்கெட் இப்படியிருக்கும்போது, நல்ல நாடகம் தயாரித்து என்ன பிரயோஜனம்? நாமே பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொள்ளவா நாடகம்?' தன்னையே கேட்டுக் கொண்டான் ராம்குமார். அவன் உறுதியானான். 'ஆமாம், என் திருப்திக்கு நாடகம் தயாரிக்கப் போகிறேன். அது உண்மையாகவே நல்ல நாடகமாயிருந்தால், நிச்சயம் சான்ஸ் கிடைக்கும். ரசிகர்கள் வரவேற்பார்கள். பத்திரிகைகள் பாராட்டி எழுதும். அந்த நம்பிக்கைதான் நாடகக் கலையின் வளர்ச்சிக்கு ஆணிவேர்.'

'நான் ஒரு முட்டாளுங்க' நாடகத்தைப் பற்றி ராம்குமாருக்கு வெகு திருப்தி ஏற்பட்டிருந்தது. அது 'க்ளிக்' ஆகும் என்ற நம்பிக்கையும் இருந்தது.

ஒரு நாள் நாடகாசிரியர் வி.கே. 'ரன் த்ரூ' ரிகர்சல் பார்த்தார். ''நான் எழுதியதை நிறைய மாத்தி நல்லாவே செஞ்சியிருக்கீங்களே'' என்று சர்டிபிகேட் கொடுத்தார். தான் எழுதியது சினிமாவில் உருத் தெரியாமல் போவதைக் கண்டு பழக்கப்பட்டுப் போய்விட்டிருந்ததால், நாடக மேடையிலும் தன் எழுத்து காணாமல் போனதைக் குறித்து வி.கே. சிறிதும்

கவலைப்படவில்லை. எப்படியாவது ராயல்டி பணம் வந்தால் சரி.

நாடகத் தயாரிப்பாளர் சற்று மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் இருந்து விட்டால் விதிக்குப் பொறுப்பதில்லை!

முரளி ஒரு பயங்கரமான செய்தியுடன் வந்தான். ''குமார், சேவிங்ஸ் சவிதா நாடகத்துல நடிக்க முடியாதுன்னுட்டாங்க வீட்டிலே பெரிய ப்ராப்ளமாம்!''

''என்ன முரளி இது பெரிய குண்டத் தூக்கிப்போடறே?''

''சவிதா மாமனார் ஊர்லேருந்து வந்திருக்கார். அவர்கிட்டே சவிதா டிராமாலே நடிக்கிறதைப் பத்திச் சொல்லியிருக்காங்க. அவருக்கு ரொம்பவும் கோவம் வந்திருச்சாம். பிள்ளைகிட்டே 'இன்னிக்கு டிராமா, நாளைக்கு டி.வி. அப்புறம் சினிமாவா? உன் புத்தி ஏண்டா இப்படிப் போச்சு? நம்ம குலம் என்ன? கோத்திரம் என்ன? உடனே கான்சல் பண்ணச் சொல்லு'ன்னாராம். சவிதாவோட ஹஸ்பெண்ட், 'இனாகுரேஷனோட நின்னுடச் சொல்றேன்'னாராம். 'அதெல்லாம்' வேணாம். ஒரு டிராமா நடிச்சா என்ன, நூறு டிராமா நடிச்சா என்ன... நான் சொல்றபடி கேக்கலேன்னா, உன் மூஞ்சியிலேயே முழிக்க மாட்டேன்'னு சொல்லிட் டாராம். சவிதா எங்க வீட்டுக்கு வந்து இதைச் சொல்லிட்டு, 'வேறே யாரையாவது போட்டுக்குங்க ப்ளீஸ்'னு அழுதுகிட்டே சொல்லிட்டுப் போயிட்டாங்க.''

''அப்போ கிராண்ட் ரிகர்சலுக்குள்ளே யாரைத் தயார் பண்றது... பெரிய ரோல் ஆச்சே... நீ வரயா, அவங்க

வீட்டுக்குப் போய் நிலைமையை எடுத்துச் சொல்லி, சவிதா மாமனார்கிட்டே ரிக்வெஸ்ட் பண்ணிப் பார்க்கலாம்!"

"வீட்டுக்கு வராதீங்கன்னு சவிதா சொல்லிட்டாங்க. மேட்டர் ரொம்ப காம்ளிகேட் ஆயிடுமாம்."

"அப்படின்னா இனாகுரேஷனை ஒரு மாசம் தள்ளிப் போட்டுடலாம்."

"சீச்சீ. உனக்கு இது முதல் நாடகம்... அதான் இப்படிப் பேசறே. இதெல்லாம் சகஜம்பா... அந்த டேட்லே நம்ம இனாகுரேஷன் நடக்கும்."

"எப்படி?"

"பாரேன்!"

COMICS PDF TIMES

# 7

ராம்குமாருக்கு பாங்க்கில் வேலையே ஓடவில்லை. முரளி என்ன செய்தியுடன் வரப்போகிறானோ என்று தவித்துக் கொண்டிருந்தான். 'லேடி ஆர்ட்டிஸ்ட் கிடைக்காமல் போய்விட்டால்...?'

"சும்மாயிருக்காம நாடகத்தை ஏன் இழுத்துப் போட்டுக்கிட்டே..? உன் ஜாதகத்துலே இப்ப ஏதோ போறாத காலம் போலிருக்கு!"— அம்மா காலையில் சொன்னது இப்போது ராம்குமாரின் மண்டையில் உரக்க எதிரொலித்துக் கொண்டிருந்தது. 'சே! பணத்தையும் பாழடிச்சுக்கிட்டு உடம்பையும் கெடுத்துக்கிட்டு' — நேரில் பேசாமல் ஸைடில் அப்பா முணுமுணுத்தது நினைவுக்கு வந்தது. 'முன் வைத்த காலைப் பின்னே வைப்பதா?'— மனத்தளர்ச்சியடைந்த நிலையிலும் எங்கோ ஒரு பிரச்னை.

ராம்குமாரோ, நினைச்ச லைட் எஃபெக்ட் கிடைக்க வில்லையே என்று கம்ப்ளீட்டாக அப்செட்! அதுமட்டுமல்ல, இன்னும் எத்தனையோ மனக் குறைகள் அவனுக்கு.

''ரொம்ப இடத்திலே மியூஸிக் 'ஓவர்லாப்' ஆச்சுப்பா. டயலாக்கே காதுல விழலே'' என்று புகார் வந்தபோது, ராம்குமார் வெடித்தான். ''நான் ஹரனை ட்ரெயின் பண்ணி டேப் ரிக்கார்டரை ஆப்பரேட் செய்யச் சொன்னேன். அவன் டிங்குகிட்டேவுட்டுட்டு மேக்கப் ரூம்லே மசால் வடை தின்னுக்கிட்டிருந்தான். நம்ம பசங்களுக்குக் கொஞ்சம்கூடப் பொறுப்பு இல்லை... லதா, மூர்ச்சையாற ஸீன்லே ஷெனாய் போடச் சொல்லியிருந்தேன். சுரேஷ் வேற எதையோ ரிக்கார்டு பண்ணியிருக்கான். ராத்திரி இதை நான் தான் சரிபண்ணியாகணும். யாரையும் நம்பி எந்த வேலையும் ஒப்படைக்க முடியலே, சே...! பாலு, நீங்க ஏன் ஆபீஸ் ஸீன்லே லேட்டா என்ட்டர் ஆனீங்க...?'

''மூர்த்தி காட்ச் வேர்டு சரியா குடுக்கலே சார்!''

''சும்மா சொல்லாதீங்க... அவர் சரியாகத்தான் பேசினார். நீங்க ஸைடுலே நின்னுக்கிட்டு வெளி ஆசாமியோட ஏதோ பேசிக்கிட்டிருந்தீங்க... இன்னொரு தரம் எல்லாருக்கும் சொல்றேன். நாடகம் ஆரம்பிச்சிடுச் சுன்னா, எல்லாரும் ப்ளேலதான் கான்ஸன்ட்ரேட் பண்ணணும். டயலாக்கை ஃபாலோ பண்ணணும். நான் நிறைய தரம் சொல்லியிருக்கேன்... டிராமா நமக்கு எண்ட்டெர்டெயின் மென்ட் இல்லே... ஆடியன்ஸுக்குத் தான். நாம் பராக்குப் பார்த்துக்கிட்டிருக்கக் கூடாது. அதுமட்டுமில்லே, ஸீன்லே நுழைஞ்சுட்டா இஷ்டத்துக்கு ஆக்ட் பண்ணக்கூடாது. ரிகர்சல்லே சொல்லிக் குடுத்த மாதிரி

செயற்கையாதான் செய்யணும். ஆனா, அது பார்க்கிறவங்களுக்கு இயற்கையா, ரியலிஸ்ட்டிக்கா இருக்கணும். அதான் டிராமா...''

முரளி தலையைச் சொறிந்தான். ராம்குமார் தொடர்ந்தான்.

''போனது போகட்டும். நாளைக்கு எல்லாரும் ரெண்டு மணிக்கே ஸ்டேஜுக்கு வந்துடுங்க. லாஸ்ட் மினிட் 'டச்சப்' பெல்லாம் இருக்கு... சில காட்சிகள்ல மைனர் கரெக்‌ஷன்ஸ் செய்யணும்... லைட், மியூஸிக்கோட முக்கியமான இடங்களைப் பார்க்கப் போறேன். அதுக்கப்புறம்...''

முரளி இடைமறித்தான். ''தோ பார் ராம்குமார்... வந்தவங்க 'நாடகம் நல்லா வந்திருக்கு'ன்னு சொல்லிட் டாங்க... நீ சொல்ற குறையெல்லாம் நமக்குத்தான் தெரியும். அதுகூட நாளைக்கு இனாகுரேஷன்லே சரியாயிடும்... நீ கவலைப்படாம போய்த் தூங்குப்பா!''

எல்லோரும் முரளிக்கு நன்றி கூறுவதற்கு அடையாளமாகக் கைதட்டி ஆரவாரம் செய்தபடியே, விட்டால் போதும் என்று வீட்டுக்குப் பறந்து சென்றனர்.

## 8

அன்றிரவு ராம்குமாரால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. அவ்வப்போது விளக்கைப் போட்டு, ஸ்கிரிப்டை எடுத்துப் படித்து அதில் சின்னச் சின்ன மாற்றங்கள் செய்து கொண்டிருந்தான். இரண்டு மணிக்குத் தூங்கியவன், விடியற்காலை நான்கு மணிக்கெல்லாம் விழித்துக்கொண்டு, இரண்டு டேப் ரிக்கார்டர்களை

வைத்துக்கொண்டு மியூஸிக்கை ரிக்கார்டு செய்தான். அதற்குப் பிறகு ஏதேதோ கணக்குகள் போட்டுப் பார்த்து, அன்றைய செலவுக்காகக் கையிருப்புப் பணத்தை எண்ணிப் பார்த்தான். ஐநூறு ரூபாய் துண்டு விழுந்தது! படுக்கையில் படுத்தபடியே, அந்தப் பணத்தை எப்படிப் புரட்டுவது என்று சிந்திக்கத் தொடங்கினான்.

காலையில் எழுந்ததிலிருந்து முரளியும் பிஸியாகி விட்டான். நேரில் சென்று சில சபா காரியதரிசிகளை அழைத்தான். சிலருக்கு 'போன்' செய்தான். பத்திரிகை அலுவலகங்களுக்குச் சென்று நாடக விமரிசனம் செய்பவர்களுக்கு இன்விடேஷன் கொடுத்து, இரண்டு வரிகளாவது எழுதும்படி மன்றாடினான்.

சப்பாணி, சினிமா டைரக்டர் பாப்ஜிராம் வீட்டுக்குச் சென்று காத்திருந்து, பல்லை இளித்து, பெரிய கும்பிடு போட்டு, காலில் விழாத குறையாக இனாகுரேஷனுக்கு வரச் சொன்னான். அவர் மூலமாக எப்படியாவது சினிமாவில் நுழைந்துவிட வேண்டுமென்பது அவனது இரண்டாண்டுக் கனவு

பத்து மணிக்கு ராம்குமார் வீட்டுக்கு வந்தான் முரளி. இருவரும் கவர்களில் பெயர்கள் எழுதிப் பணம் போட்டனர்.

சரியாக இரண்டு மணிக்கு ராம்குமார் தியேட்டரில் இருந்தான். அது நிசப்தமாக இருந்தது. மனித நடமாட்டமே இல்லை.

சூளைமேடு பாபுவின் ஆட்களில் இருவர், ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்தனர். ராம்குமார் ஒரு நாற்காலியில் அமர்ந்து, அன்று செய்யவேண்டிய மாற்றங்களைக் குறித்து வைத்திருந்த பேப்பரை ஒரு முறை

படித்தான். 'எல்லோரும் நேரத்துக்கு வருவார்களா?' நினைத்த மாற்றங்களைச் செய்ய முடியுமா? ஹாலுக்கு மியூஸிக்கை முழுவதும் ஒரு முறை போட்டுக் காட்ட வேண்டுமே... நேரம் இருக்குமா? நாலாவது ஸீன்லே...!' – இப்படி யோசித்துக் கொண்டிருந்தவன் அசந்து தூங்கிவிட்டான்!

விழித்துக் கொண்டபோது, 'ரொம்ப நேரம் தூங்கிவிட்டோமோ' என்று பயந்துபோனான். மணி மூணரை, அப்போதும் தியேட்டர் காலியாகத்தான் இருந்தது. முரளியைக்கூட காணோம். 'எல்லோரையும் ரெண்டு மணிக்கே வரச்சொல்லியிருந்தேன். இவ்வளவு சொல்லியும் இவங்களுக்குப் பொறுப்பே இல்லியே...' ராம்குமார் பொறுமையிழந்தவனாய் மேடைக்கும் வாசலுக்கும் நடந்து கொண்டிருந்தான்.

மூன்றேமுக்காலுக்கு வியர்வையில் நனைந்தபடி முரளி வந்தான். அவன் மீது 'வள்'ளென்று விழுந்தான் குமார். ''நீயே லேட் பண்ணினா எப்படி?''

முரளி அவன் மூடைப் புரிந்து கொண்டான். ''குமார்! இன்னிக்கு லேட்டா வந்தா யாரையும் ஒண்ணும் சொல்லாத. அவங்க மூடு அவுட்டாயிடும். அப்படியே விட்டுடு. ரொம்ப சேஞ்சஸ் பண்ணினா கன்ஃப்யூஸ் ஆயிடுவாங்க...''

''சரி, சரி மொதல்லே அந்த ஆளுங்களை எழுப்பு... ஸ்பாட் லைட்ஸையெல்லாம் மாத்திக் கட்டணும்...''

நாலரை மணிக்கு மேக்கப் கண்ணபிரான் வந்தார். ''கண்ணபிரான் சார், அப்புறம் மறந்துடுவேன்... பாலுவுக்கு நேத்து வெச்ச மாதிரி அவ்வளவு பெரிய மீசை வேணாம். மூர்த்திக்கு வேறே 'விக்' வையுங்க'' என்றான் ராம்குமார், ஸ்பாட்டை சாக்பீஸால் மார்க் செய்து கொண்டே! ஐந்து

மணிக்கு சுபத்ரா வந்து ராம்குமாருக்கு அவசர அவசரமாக ''நமஸ்தே'' என்று சொல்லிவிட்டு, மேடையைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு மேக்கப் அறைக்கு விரைந்தாள். ஆறேகால் வரை ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர்.

''ஆறேகாலுக்கு மேக்கப் அறையிலும் ஸ்டேஜிலும் 'வளவளா' பேச்சு. 'சளசளா' பரபரப்பு. கண்ணில் பட்டவர்களையெல்லாம் நிறுத்தி ராம்குமார் ஏதோ இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துக் கொண்டிருந்தான். அதை அரைகுறையாகப் புரிந்து கொண்டவர்களின் முகங்களில் பேயறைந்த எக்ஸ்ப்ரஷன்!

ஆறேமுக்காலுக்குப் பூஜை. வி.கே. வந்திருந்தான். ஆனால், ராம்குமார்தான் 'வாத்தியார்'! பெரியவன், சின்னவன் என்ற பேதமில்லாமல் அவன் காலைத் தொட்டு வணங்கினார்கள். வெளி ஆசாமிகள் நாலைந்து பேர் நடிகர்களின் கைகளைக் குலுக்கி 'பெஸ்ட் ஆஃப் லக்' சொன்னார்கள்.

முதல் மணி அடிக்கப்பட்டது. திடீரென்று பரபரப்பு அதிகமாயிற்று. அங்குமிங்கும் ஓடி ஆளுக்கு ஆள் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கத் தொடங்கினர். ஒரே குழப்பம், குளறுபடி செம டென்ஷன்!

ஹாலில் சுமார் இருநூறு பேர் கூடியிருந்தனர். சப்பாணி படுதா இடுக்கு வழியாகப் பார்த்தான். ஸீட்டில் பாப்ஜிராம் இல்லை. ஏகமாக ஏமாற்றம், சுபத்ரா, முரளியிடம் நாலு பேருக்கு 'காம்ப்ளிமெண்டரி' டிக்கெட் கேட்டாள். கூட்டமே இல்லையே என்று அவனுக்கு எரிச்சல். ''நிறைய இடம் இருக்கு... எங்கேயாவது உட்காரச் சொல்லுங்க மேடம்.''

ராமுடுவும்... சோனியும் ஹாலுக்குள் வரவில்லை. என்ட்ரன்ஸில் நின்றபடியே சிகரெட்டும் கையுமாக நண்பர்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

இரண்டாவது 'பெல்' கொடுத்து, விளக்குகள் அணைந்து, டைட்டில் மியூஸிக் தொடங்கிவிட்டது.

சாமிஜி இரண்டு 'லோட்டா'க்களுடன் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த செய்தி உள்ளே பரவிற்று. உடன் வந்த சந்தியாதேவியும் முத்தம்மாவும் இரண்டு வரிசை தள்ளி உட்கார்ந்திருந்தார்கள். ''இந்த கழுதைங்களை எவன் கூப்பிட்டான்?'' இது சுபத்ராவின் காமெண்ட்.

முரளி நைஸாக ராம்குமாரை மியூஸிக் 'பிட்'டுக்கு அனுப்பிவிட்டான். அவன் உள்ளே இருந்தால் எல்லோரையும் டென்ஷனாக்கிவிடுவான் என்ற தீர்க்க தரிசனம் அவனுக்கு!

நாடகம் தொடங்கி, காட்சிக்குக் காட்சி ஆடியன்ஸ் ரசித்ததைக் கண்டு பூரித்துப் போனான் ராம்குமார். அதே சமயம் குறைகளையும் மனத்தில் குறித்து வைத்துக் கொண்டான்.

நாலாவது காட்சி முடிந்ததும், சாமிஜி, 'லோட்டா'க்கள், சந்தியாதேவி முத்தம்மா — ஐவரும் 'வாக்—அவுட்' செய்ததை ட்ரூப்காரர்கள் சிலர் கவனித்துக் கிசுகிசுத்தனர்.

இடைவேளையின்போது ராமுடுவும், சோனியும் காணாமல் போனார்கள். கர்ம சிரத்தையாகச் சபாக்களுக்குப் போய் 'நாடகம் ஊத்திக்கிச்சுப்பா' சொல்லியாக வேண்டுமே!

நாடகம் முடிந்து கூட்டம் கலைந்து சென்றபோது... 'ஜோக்' தோரணங்களையே கேட்டுப் பழக்கப்பட்டவர்கள்,

''காமெடியே இல்லேப்பா'' என்றனர். கஞ்சத்தனமாகப் புகழ்பவர்கள், ''நல்லா செஞ்சிருக்காங்க'' என்று மேலுதட்டோடு பாராட்டினர். 'மெஸேஜ் பிரியர்கள்', ''மொத்தத்துலே என்ன சொல்றாங்கன்னே புரியலே'' என்று புருவத்தை உயர்த்தினார்கள்.

''நீங்க பட்ட கஷ்டம் வீண் போகலே'' என்று யாரோ ஒருவர் ராம்குமாரிடம் சொல்லிவிட்டுப் போனார்.

அப்படியென்றால் இனிமேல் கஷ்டப்பட வேண்டாமா?

நாடகம் போடுவதிலுள்ள கஷ்டங்கள் அரங்கேற்றத்தோடு தீர்ந்து விடுமா? வீட்டைக் கட்டின கஷ்டம் புதுமனை புகுவிழாவோடு தீர்ந்துவிடுகிறதா? கல்யாணம் பண்ணுவதில் உள்ள சிரமம் முகூர்த்தம் நடந்ததோடு முடிந்துவிடுமா?

ராம்குமார் இனி படப்போகும் சிரமங்கள் ஒரு தொடர் நாடகம். ஒவ்வொரு முறை நாடகம் மேடையேறும்போதும் ஒரு சோதனையைச் சந்திப்பான். உள்ளூரிலும் வெளியூரிலும் சபாக்களில் தேதி வாங்குவதும், அத்தனை பேரையும் ஒன்றாகச் சேர்த்து (கடைசி நிமிடத்தில் காலை வாரிவிடுபவர்களுக்கு 'சப்டிஸ்ட்யூட்' போட்டு) நாடகம் போட்டுவிட்டு வருவதும் பகீரதப் பிரயத்தனத்தை விடவும் கடுமையானது என்பதை உணரப்போகிறான். ஆனால், சோதனைகளுக்குப் பின்னர் சாதனையின் பெருமையில் மூழ்கித் திளைப்பான். அந்த ஆனந்தம் நாடகம் போட்டுப் பார்த்தவர்களுக்குத்தான் புரியும்.

வாழ்க அமெச்சூர் நாடகக்கலை!

---

# நாடகம் போட்டுப்பார்

மெரீனா



COMICS PDF TIMES
HSC